Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

புல்மைப்பரிசில் திட்டம் 2004 ற்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க **30.11.2003** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடா நாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 29 (24.11.2003) திங்கட்கிழமை இதழ் :55

## நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளார் சந்திரிகா; எச்சரிக்கை விடுக்கிறது ஐரோப்பிய நாடாளுமன்றம்!

(நியுயோர்க்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று, நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தியதை தாம் ஆழமாகக் கவனத்தில் எடுக்கவுள்ளதாக - ஐரோப்பிய நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.

மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றதன் மூலம் நாட்டை நெருக்கடி நிலைக்குள் ஜனாதிபதி இட்டுச்சென்றுள்ளார் என மிகவும் கடுமையான தொனியில் ஐரோப்பிய நாடாளுமன்றம் ஜனாதிபதி சந்திரிகாவை எச்சரித்துள்ளது.

தேசிய நலனுக்காக மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் பாதுகாப்புக் குழு ஒன்றினை அமைத்து பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முன்வந்துள்ளதையும் - ஐரோப்பிய நாடாளுமன்றம் வரவேற்றுள்ளது.

அத்துடன், ஜப்பானில் நடைபெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளில் ஐரோப்பிய யூனியன் மிகவும் பிரதான பங்கை வகித்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக நாளை செவ்வாய் கொழும்பு வரும் ஐரோப்பியயூனியன் வெளிவிவகார அமைச்சர் கிறிஸ் பற்றன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் மத்திய செயற்குழு 30 ஆம் திகதி கூட்டப்படுமாம்!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு எதிர்வரும் 30 ஆம் திகதி கூடும் வேளையில் தனக்கெதிராகக் கொண்டுவரும் எந்தவொரு தீர்மானத்தையும் தான் முறியடிக்கத் தயாரென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அவர் இதனை கொழும்பு செய்தி ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

கட்சியின் கிளைகளால் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானங்கள் பொய்யானவை. தனிப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய வெளிவிவகார ஆணையாளர்

# பிரபாவைச் சந்திக்க இனவாதிகள் எதிர்ப்பு!



## இந்தியத் தூதரக அதிகாரிகளும் விசனம்

(கொழும்பு)

**ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் இலங்கைக்கு வரும்போது, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க ஏற்பாடாகி இருப்பது குறித்து, தென்னிலங்கை சிங்கள பௌத்த இனவாத சக்திகள் விசனம் தெரிவித்துள்ளன.**

நாளை கொழும்புக்கு வரும் கிறிஸ் பற்றன் - புதன்கிழமை காலை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. பிரபாகரனின் பிறந்த நாளன்று அவரைச் சந்திக்க கிறிஸ் பற்றன் வன்னிக்குச் செல்லவிருப்பது, தென்னிலங்கை இனவாத சக்திகள் மற்றும் சில ஊடகங்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## படையினரின் கெடுபிடிகளின்றி மட்டக்களப்பில் மாவீரர் வாரம்!

(மட்டக்களப்பு)

படையினர், பொலிஸாரின் இடையூறு இன்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் எழுச்சி வாரம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

## இலங்கையின் அழைப்பின் பேரிலேயே கிறிஸ் பற்றன் கொழும்பு வருகின்றார்!

(கொழும்பு)

இலங்கையின் அழைப்பை ஏற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணை [illegible] திருந்தனர். இதனை ஏற்றுக்கொண்ட கிறிஸ் பற்றன் நாளை இலங்கைக்கு வருகிறார்.

இலங்கை வரும் அவர் - ஜனாதிபதி,

## இந்தியத் தூதுவரையும் கிறிஸ் பற்றன் சந்திப்பார்!

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயமாக இலங்கை வரும் ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் கிறிஸ் பற்றன், நாளை மறுநாள் கிளிநொச்சியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச்

(மட்டக்களப்பு)

படையினர், பொலிஸாரின் இடையூறு இன்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் எழுச்சி வாரம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும், இராணுவக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தினத்தை முன்னிட்டு திருமலையில் ஓட்டோ பவனி!

(திருகோணமலை)

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று திருகோணமலை மாவட்டத்தில் விசேட ஓட்டோப் பேரணி நிகழ்வொன்று இடம்பெற்றது.

350 ஓட்டோக்கள் பங்கு பற்றிய இந்தப் பேரணியானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற் துறையினரின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் - பாட்டாளிபுரத்தில் மாவீரர் நினைவுத் தூபி!

(திருகோணமலை)

மூதூர், பாட்டாளிபுரம் பகுதியில், மூதூர் பிரதேச மாவீரர்களை நினைவுகூரும் வகையில் மாவீரர் தின நினைவுத் தூபி ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமன் இந்த நினைவுத்தூபியைத் திறந்து வைத்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# கிறிஸ் பற்றன் கொழும்பு வருகின்றார்!

(கொழும்பு)

இலங்கையின் அழைப்பை ஏற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பற்றன் இங்கு வரவிருக்கின்றார் என, வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவும் பிரான்ஸிற்குச் சென்ற சமயம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளரை இலங்கைக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனை ஏற்றுக்கொண்ட கிறிஸ் பற்றன் நாளை இலங்கைக்கு வருகிறார்.

இலங்கை வரும் அவர் - ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்திக்கும் அதேவேளை, நாளை மறுதினம் கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து 27 ஆம் திகதி புதுடில்லி செல்லும் அவர் அங்கு இடம்பெறவுள்ள இந்து ஐரோப்பிய கூட்டு மாநாட்டிலும் பங்குபற்றவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், (10 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்மட்ட புலி உறுப்பினர்களுக்கே இனி ஹெலிகொப்ரர் வசதியாம்!

## மீளாய்வு செய்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளின் பொருட்டு, விடுதலைப் புலிகள் இலவசமான முறையில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலியில் பயணிப்பதையிட்டு தான் மீளாய்வு செய்யவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசகர்கள், இது தொடர்பில் ஆராய்ந்து வசதியான முடிவினை எடுப்பார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த வசதிகள் எதுவும் விடுதலைப் புலிகளுக்கு மறுக்கப்படமாட்டாது. ஆனால், இனி வரும் காலங்களில் அவர்களின் தேவைகளை அறிந்து உயர்மட்ட உறுப்பினர்களுக்கே இது வழங்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

புதிய மாற்றங்கள் தொடர்பாக அரசின் சமாதானச் செயலகம் எதிர்பார்ப்பதாகவும், ஆனால், இதுவரை எந்தவொரு மாற்றமும் இது தொடர்பில் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், இது தொடர்பில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான சிறில் ஹேரத்துடன் கலந்துரையாடவுள்ளதாக (10 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயமாக இலங்கை வரும் ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் கிறிஸ் பற்றன், நாளை மறுநாள் கிளிநொச்சியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்த பின்னர் இந்தியத் தூதுவர் நிருபம் சென்னைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நாளை மறுநாள் மாலை இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரமேஸ்வராச் சந்தி சம்பவம்; மூன்று படையினருக்கு காயம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் பேரவையினுள் அடாவடித்தனம் புரிந்த இராணுவத்தினரின் துப்பாக்கி ஒன்று வெடித்ததில், மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடிகள் குறித்து ஐ.தே.க. நாடு தழுவிய பிரசாரம்!

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் நாடு தழுவிய ரீதியில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த அரசியல் விழிப்பு நடவடிக்கை தொடர்பாக தெரிவித்த (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# மாவீரர்தின நிகழ்வைக் குழப்பும் நடவடிக்கையானது படையினரது தமிழின உணர்வை மதிக்காத செயல்!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

தமிழீழ மாவீரர்தின நிகழ்வுகளைக் குழப்பும் படையினரது செயற்பாடுகள் - தமிழின உணர்வினை மதிக்காத காட்டுமிராண்டிச் செயலாகும் என, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக யாழ். குடாநாட்டில் தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து படையினர் பலர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதனைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்கள இன வெறியிலும், தமிழ் விரோதப் போக்கிலும் ஊறித் திளைத்த இராணுவத்தினரும், பொலிஸாரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஒருபோதும் மதிப்பளிக்கப் போவதில்லை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

தமிழீழ தேசிய மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் தொடர்பில் - படையினர் கடந்த சில நாட்களாக நடந்து கொள்ளும்விதம் இதனையே உணர்த்துகிறது. கடந்த வாரம் இராணுவத் தரப்பால் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில் வழங்கப்பட்ட உறுதிமொழி படையினரால் மிதிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் மக்கள் நலனுக்காகப் போராடி வீழ்ந்த மாவீரர்களை நினைவுகொள்ள அமைத்துவரும் அலங்கார வளைவுகள் கொடிகள், பதாகைகள் என்பன படையினரால் அறுத்தெறியப்படுகின்றன. இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மக்கள் ஆயுதமுனையில் மிரட்டப்படுகின்றனர். படை உயர் அதிகாரிகள் சிலர் வர்த்தக நிலையங்களுக்கும், வாகனத் தரிப்பிடங்களிற்கும் சென்று மாவீரர் கொடிகளை அறுத்தெறியுமாறு மிரட்டியுள்ளனர்.

தொடர்ந்தும் மாவீரர் நினைவு அலங்காரங்களைச் செய்பவர்கள் கண்காணிக்கப்படுவர் என - வர்த்தகர்கள், சாரதிகள், மாணவர்கள் போன்றோர் படை அதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர்.

முக்கிய சந்திகள்,. வீதிகள் போன்றவற்றில் அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளை பலாத்காரமாக எக்காரணமுமின்றி அகற்றிவரும் படையினர் மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையின் உச்சத்தை நேற்று பரமேஸ்வராச் சந்தியில் நிகழ்த்தியுள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுமதியுடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த மாவீரர் நினைவு வளைவை கடந்த வெள்ளியன்று நூற்றுக்கணக்கில் திரண்ட படையினர் அகற்றமுற்பட்டனர். எனினும் அது பலிக்காதுபோகவே நேற்று முன்தினம் பரமேஸ்வராச் சந்தியில் எம்மால் அமைக்கப்பட்டிருந்த அதே வளைவை இரவு 11 மணியளவில் படையதிகாரி ஒருவர் தலைமையில் வந்த படையினர் பலவந்தமாக வாகனத்தால் மோதி அகற்றியுள்ளனர்.

தொடர்ந்து சர்வதேச தமிழீழ மாணவர் அலுவலகத்தினுள் ஆயுதங்கள் உள்ளன என்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி - உள்ளேயிருந்த ஆவணங்கள், புத்தகங்கள் என்பவற்றை சேதப்படுத்தியதுடன் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராவதற்காக அங்கே தங்கியிருந்த சிறுவர்களை - சிறுவர் உரிமைகள் பற்றி அதிகம் பிதற்றிக் கொள்ளும் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக அச்சுறுத்தியுள்ளனர்.

தமிழ் மாணவர்களின் பாதுகாப்பிற்காகவும், மாணவர்களின் நலனிற்காகவும், பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினுள் சோதனையிடுவதற்காக நீதிமன்ற அனுமதி எதுவுமின்றி, பலவந்தமாக உள்ளே பிரவேசித்து மேற்கொண்ட அடாவடித்தனங்களை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தனைக்கும்மேலாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டபோதும், அவர்கள் ஸ்தலத்திற்கு வருகைதராமல் தமது அலுவலகத்தில் கண்மூடி மௌனிகளாக இருந்துள்ளனர். இது சிங்கள இனவெறியாட்டத்துக்கு அவர்களும் துணைபோயிருப்பதாகவே கருதச்செய்கின்றது.

மண்ணுக்காகவும், எமது வாழ்வுக்காகவும் தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கொள்ளும் ஏற்பாடுகளுக்கு எதிராக - மாணவர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்வதும் அவர்களின் அலுவலகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து அவற்றைச் சேதப்படுத்துவதும் நாகரீகமான செயலல்ல.

இந்தப் பயங்கரமான ஆத்திரமூட்டும் சம்பவத்திற்கும், இதனால் இனிமேல் ஏற்படப்போகும் விளைவுகளுக்கும் - சிங்களப் படைகளும், அவற்றைத் தற்போது கையாண்டு வரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுமே பொறுப்பேற்க வேண்டும்.

கடந்த காலங்களில் பொங்கு தமிழ் நிகழ்வை ஒடுக்க சந்திரிகாவும், அவரது படைகளும், கைக்கூலிகளும் மேற்கொண்ட அநாகரிகமான செயற்பாடுகள் எத்தகைய பின் விளைவுகளை ஏற்படுத்தியதோ அவையே மாவீரர் நாள் நிகழ்வைக் குழப்ப முற்படும்போதும் ஏற்படும் எனச்சுட்டிக்காட்ட விரும்புகிறோம். என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பரிசளிப்பு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய பரிசளிப்பு விழாவும், கட்டடத் திறப்பு விழாவும் நாளை காலை 9.00 மணிக்கு, அதிபர் சு. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸவரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். திருமதி தவமணி விக்கினேஸ்வரன் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பார்.

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்திலுள்ள கட்டாக்காலி நாய்களை, தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து நாளை நஞ்சூட்டி அழிக்கவுள்ளனர்.

இப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் கடந்த காலங்களைக் காட்டிலும், தற்பொழுது மிக அதிகமாக காணப்படுவதாகவும் - பல வருடங்களின் பின் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவிருப்பதாகவும் - அன்றைய தினம் வளர்ப்பு நாய்களை கட்டிவைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். (83)

# படையினரின் அண்மைய நடவடிக்கைகள் சமாதான சூழலை குழப்பும் முயற்சியாகும்!

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தின நிகழ்வைக் குழப்புவதனூடாக படையினர் சமாதானத்தைக் குழப்பமுற்படுகின்றனர்.

இவ்வாறு, யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, உரிமைப் போரிலே உயிர்நீத்த தம் உறவுகளின் நினைவுகளைப் போற்றி, பொதுமக்கள் மேற்கொண்டுவரும் மாவீரர் நினைவு நிகழ்வுகளை இராணுவமும், பொலிஸாரும் குழப்ப முயல்வதானது சமாதான சூழ்நிலையையே குழப்பும் உள்நோக்கம் கொரண்டது என சந்தேகிக்கிறோம்.

நேற்றுமுன்தினம் பின்னிரவு யாழ். திருநெல்வேலியின் பரமேஸ்வராச் சந்திக்கருகில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். மாவீரர் வளைவின் உச்சியில் மாணவர்கள் இருந்தபோதே, வளைவு இராணுவ வாகனத்தினால் மோதி வீழ்த்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகமும் சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இந்நிகழ்வுகளை வன்மையாகக் கண்டிப்பதுடன், இனிவரும் நாட்களில இவ்வாறான சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொள்ளுகிறோம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமூகவிரோத செயலில் ஈடுபடுவோர் திருந்துவதாகத் தெரியவில்லை!

## யாழ்.பொலிஸ் அதிகாரி விசனம்

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் இடங்களை மாற்றுகின்றார்களே தவிர, குற்றச்செயல்களை விடுகிறார்கள் இல்லை என - யாழ் பொலிஸ் நிலையத்தின் சிறு குற்றத்தடுப்புப் பிரிவின அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது,

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக சமூகவிரோதச் செயல் குறித்த முறைப்பாடுகள் அதிகரித்துவருகின்றன. குறிப்பாக இரவு நேரங்களில் வீடுகளின் முன்பாக கூட்டம் கூடிக்கதைப்பது, சூதாடுவது, வீதியால் செல்பவர்களுடன் சேஷ்டைபுரிவது, கூச்சலிடுவது தொடர்பான முறைப்பாடுகள் கடந்த 30 நாட்களில் மட்டும் பத்திற்கும் அதிகமாக கிடைத்துள்ளன.

இத்தகைய குற்றச்செயல் புரிவோரைத் தேடிச்சென்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்தபோதிலும், அவர்கள் தாம் புரிகின்ற குற்றச்செயல்களுக்குரிய இடங்களை மாற்றிக்கொள்கிறார்களே தவிர, திருந்துவதாக தெரியவில்லை.

பெண் பிள்ளைகள் மீது தேவையற்ற முறைகேடான நடவடிக்கைகளை மேற்கொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இது தொடர்பான முறைப்பாடுகளும் அதிகளவில் கிடைத்துள்ளன, எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்
## மாவீரர்களின் பெற்றோரை கௌரவித்தல்

**காலம்:** 26.11.2003 புதன்கிழமை காலை 9 மணி
**இடம்:** தலைமைக் காரியாலய மண்டபம், தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம், துர்க்காபுரம்

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க தொழிற்பரப்பைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் வைபவம் நடைபெறவிருக்கிறது. குறித்த நிகழ்விற்கு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர்களை சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்த நிகழ்விற்கு சங்க உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

23.11.2003
தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்.

(சி-1823)



நிறஞ்சனாஸ் சங்கானை

ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த இன்று மட்டும்

ஆல்பம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

நாளை முதல் விஜய், ஜோதிகா நடித்த திருமலை

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

Get Carder

(சி-1752)



ராஜா யாழ்ப்பாணம்.

லக்கிஸ்ரார் அஜித், மீராஜஸ்மின், கபாலீ நடித்த

ஆஞ்சநேயா

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-1751)


## நமது ஈழநாடு நடத்திய தரம் ஐந்து மாணவர்களின் மாதிரிப் பரீட்சைப் பெறுபேறுகள்

| பெயர் விபரம் | மொத்த புள்ளிகள் |
|---|---|
| **யா/ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி** | |
| 227. இ.பவித்திர | 155 |
| 228. ச.நர்சுஜா | 125 |
| 229. கி.சுதர்சனா | 118 |
| 230. த.லேனுஜா | 118 |
| 231. ச.றொஜினா | 116 |
| 232. இ.சுதர்ஜன் | 109 |
| 233. இ.சாருஜன் | 107 |
| 234. த.ரகுவரன் | 106 |
| 235. கு.தாரணி | 105 |
| 236. ஸ்ரீ.அருளீசன் | 103 |
| 237. க.சிவோதயன் | 103 |
| 238. வி.கார்த்திகா | 101 |
| 239. தெ.சகிதா | 100 |
| 240. ந.ஜேனுகா | 100 |
| **யா/மத்திய கல்லூரி** | |
| 241. ஜ.சயோராஜ் | 100 |
| 242. கு.அசோக்குமார் | 100 |
| 243. த.கண்ணபிரான் | 100 |
| 244. த.துஷாந் | 100 |
| 245. அ.சுகிர்தன் | 129 |
| 246. சூ.பிரவீன் | 111 |
| 247. இ.திலக்சன் | 113 |
| 248. ர.வதுஷணன் | 122 |
| **யா/திருநெல்வேலி இ.த.க. பாடசாலை** | |
| 249. நா.லக்ஷிகா | 107 |
| 250. த.தனேஷன் | 103 |
| 251. அ.தாட்சாயினி | 103 |
| 252. போ.சாரங்கன் | 126 |
| 253. சி.தேனுகன் | 104 |
| 254. கு.நிதர்சன் | 111 |
| **யா/றோ.க.த.க. பாடசாலை** | |
| 255. த.தஜனிகா | 106 |
| **யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்** | |
| 256. சி.சிவதர்சன் | 102 |
| **யா/சென். பெனடிற் றோ.க.த.க. வித்தியாலயம்** | |
| 257. லோ.இந்துஜா | 107 |
| **கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை** | |
| 258. அ.சஞ்சீவா | 110 |
| **யா/திருக்குடும்ப கன்னியர் மடம்** | |
| 259. ஆர்.ஜெனற் கரோலின் | 100 |
| **யா/நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை** | |
| 260. ம.லங்கேசன் | 100 |
| **யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்** | |
| 261. இரா.துர்க்கா | 124 |
| 262. த.மதூசன் | 100 |
| 263. க.அனோஜா | 108 |
| 264. ர.துவாரகா | 134 |
| 265. ம.நிசாந்தி | 119 |
| 266. சி.பிரகாஸ் | 134 |
| **யா/ தந்தை தொடக்க நிலைப்பள்ளி** | |
| 267. மா.நாகவதனி | 153 |
| **யா/ மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்** | |
| 268. ஸ்ரீ.தேவசொரூபி | 108 |
| 269. கே.நிஷானி | 128 |
| **யா/ புனித பத்திரிசியார் கல்லூரி** | |
| 270. எஸ்.அலெக்ஸ் சேவியர் | 100 |
| 271. வி.அஜந்த் | 102 |
| 272. ஜெயந்த் | 100 |
| 273. கிருபன் | 110 |
| **யா/நல்லூர் ஸ்தான சீ.சி.த.** | |
| 274. ச.சர்மிளா | 100 |
| 275. சு.கஜரூபி | 122 |
| **யா/ உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை** | |
| 276. இ.அனோஜிதா | 100 |
| 277. பா.கிறிஸ்ரின் வேணி | 103 |

(தொடரும்)

# சுதந்திரக்கட்சியுடனான கூட்டணி அரசில் ஜே.வி.பிக்கு இரண்டு அமைச்சர் பதவிகள்

## கூட்டணிப் பேச்சுக்களில் இறுதி முடிவு

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் தலைமையில் அமைக்கப் படக்கூடிய அரசாங்கத்தில் இரண்டு, அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சி யுடன் கூட்டணி அமைப்பதற்கு ஜே.வி.பி. இணக்கம் தெரிவித்துள் ளது.

விவசாய, காணி மற்றும் நீர்ப்பாச னத்துறை அமைச்சர் பதவிகளை யும், கடற்தொழில், நீரியல்வளத் துறை அமைச்சர் பதவியையும் தமக் குத் தரவேண்டும் என, ஜே.வி.பி. விடுத்த கோரிக்கைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணக்கம் தெரிவித் துள்ளது.

முன்னதாகச் சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு, நான்கு அமைச்சுப் பொறுப்புக்களைத் தமக்கு வழங்கவேண்டும் என்று ஜே.வி.பி. கோரிவந்தது. அத்துடன் பிரதிப்பாது காப்பு அமைச்சுப் பொறுப்பையும் தமக்கே தரவேண்டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தி வந்தது.

கடந்த 17 ஆம் திகதி நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத் தியகுழுக் கூட்டத்தில், ஜே.வி.பி.யுட னான கூட்டணிக்காக விட்டுக் கொடுக்கவேண்டிய அமைச்சுப் பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யவேண்டிய தேர்தல் தொகுதி கள் பற்றிய விபரத்தினை, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வெளியிட்டார்.

இந்தக் கூட்டத்தில், கூட்டணி தொடர்பான புதிய் யாப்பு விதிகள், கொள்கை அறிக்கை மற்றும் கூட் டறிக்கை ஆகியவற்றை உள்ளடக் கிய மூன்று அறிக்கைகள் முன்வைக கப்பட்டன.

இந்த வரைபுகளில் கையாளப் பட்டிருந்த மொழிநடை குறித்து, பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி யதையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலும், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலை மையிலும் அமைக்கப்பட்ட இரண்டு குழுக்களிடம் மீளவும் வரபுகளைத் தயாரிக்கும்பணி ஒப்படைக்கப்படடது.

இந்தக் கூட்டணி -ஒப்பந்த வரை பில் அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் - கொழும்பு, கம்பஹா, குரு ணாகல், காலி ஆகிய மாவட்டங்க ளின் நியமனப் பத்திரங்களில், இந்தக் கூட்டணி சார்பில் தாக்கலா கும். தலா மூன்று ஜே.வி.பி. வேட்பாளர்களின் பெயர்களைத் தாக் கல் செய்வதென்றும், ஏனைய மாவட் டங்களில் தலா இரண்டு வேட்பாளர்க ளின் பெயர்கள் இடம்பெறுமென்றும் முடிவாகியுள்ளது. இதன்படி, மொத் தம் 44 ஜே.வி.பி. வேட்பாளர்கள் இந்தக் கூட்டணியின் சார்பில் போட்டி யிடவுள்ளனர். அத்துடன், தேசியப் பட்டியலில் ஜே.வி.பி.க்கு நான்கு இடங்கள் ஒதுக்கவும் முடிவாகி யிருக்கிறது.

## லேக் ஹவுஸின் ஆசிரிய பீடத்தில் மாற்றங்கள்

ஊடகத்துறை அமைச்சை ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்க, தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்ட பின்னர், லேக் ஹவுஸ் நிறுவனத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள நாளிதழான தினமின மற்றும் வார இதழான சிலுமினவின் ஆசிரியபீடத்தைச் சேர்ந்த ஐந்து முக்கிய தலைமை நிர்வாகிகள் உட னடியாக மத்திய செய்திப்பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதியின் ஊட கப்பிரிவுப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸின் மகள் - லேக் ஹவுஸ் நிறு வனத்தில சிங்களப் பதிப்புக்களுக் கான நிர்வாக ஆசிரியராக நியமிக் கப்பட்டிருக்கிறார்.

## இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து

# கொமன்வெல்த், சர்வதேச நாடாளுமன்றிடம் 130 எம்.பிக்கள் கையெழுத்திட்டு மகஜர்!

நாடாளுமன்றத்தின் சுயாதீன தன்மைக்கும், அதிகாரங்களுக்கும் விடுக்கப்பட்ட பல்வேறு தரப்பின் அழுத்தங்களை தடுக்க ஒத்துழைக் குமாறு, பொதுநலவாய நாடுகளிலும் மற்றும் சர்வதேச நாடாளுமன்றத்தி டமும் கோரிக்கைவிடுக்க, நாடா ளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். இதற்காக 130 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வந்துள்ளதாக ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளரும், அமைச்சரு மான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளைப் பொதுநலவாய பொதுச் செயலாளர் அலுவலகத் துக்கும், சர்வதேச நாடாளுமன்றச் செயலாளர் அலுவலகத்துக்கும் எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை பலமுள்ள அரசாங்கத்துடன் கலந்துரையாடாது, நாடாளுமன் றத்தை ஒத்திவைத்தால் - நாடாளுமன் றத்தின் சுயாதீனத்தன்மையும், அதன் அதிகாரங்களும் கேள்விக்குறியாக உள்ளதாக இந்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு, சர்வதேச அமைப்புக்கள் இரண்டும் நாடாளுமன்றத்தின் சுயா தீன நம்பிக்கையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண் டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட் டது.

அத்துடன், இந்த நிலைமை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக, இலங்கைக்கு வருமாறும் கடிதத்தில் கையொப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் - இந்த இரு சர்வதேச அமைப்புக்களிடம் கேட்டுக்கொண் டுள்ளனர்.

## ஆஸ்துமா நோய்க்கான மருந்து இலங்கையில் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

இலங்கை வைத்தியர் ஒருவர்- ஆஸ்துமா நோய்க்கான மருந் தொன்றினைத் தயாரித்துள்ளார். இதன்மூலம் வெளிநாடுகளிலிருந்து இந்நோய்க்காக இறக்குமதி செய் யப்படும் மாத்திரைகளுக்காகச் செலவுசெய்யப்படும் பல மில்லியன் ரூபாவை மீதப்படுத்தமுடியுமென அறி விக்கப்பட்டுள்ளது.

டொக்ரர் அனில் குணதிலக என்பவராலேயே இந்த மருந்து தயா ரிக்கப்பட்டது. மருத்துவ அபிவி ருத்தி தொடர்பான ஆய்வில் ஈடுபட்டி ருக்கும் இவர், இந்த மாத்திரை தொடர்பாக இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நடத்திய பரிசோத னையில் சித்தியடைந்துள்ளார்.

இதன்மூலம், வைத்தியசாலைக ளில் இந்த மாத்திரையை அடுத்த வருடம் முதல் பாவனைக்குவிட அரசு இணங்கியுள்ளது. இதற்காக 60 தொடக்கம் 75 மில்லியன் வரையான மாத்திரைகளை அர சாங்கம் கோரியுள்ளது. இதனால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆஸ்துமா மாத்தி ரைகளுக்கு - இது பிரதியீடாக இருக்குமெனத் தெரிவிக்கப்படு கிறது.

300 மில்லிகிராமுடைய ஒரு மாத்திரையின் விலை 2.05 சதமா கும். 125 மில்லிகிராம் மாத்திரையின் விலை 1.25 சதமாகும். இதன்மூலம், இலங்கையில் முதற்தடவையாக மலிவான விலையில் கிடைக்கும் மாத்திரை இதுவாக இருக்கும் ஆனால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மாத்திரைகளின் விலை இதனைவிட ஐந்துமடங்கு உயர்வா கும்.

இது ஒரு மிகப்பெரிய நடவடிக் கையாகும். இந்தக் மாத்திரையின் விலை மிகவும் மலிவு. 12 மணி நேரம் இது வேலைசெய்யக்கூடியது. எனவே, இது தொடர்பில் நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இதுபோன்ற மாத்தி ரைகளுக்காகச் செலவுசெய்யப்படும் பணத்தினை மீதப்படுத்தலாமென டொக்ரர் குணதிலக மேலும் தெரி வித்தார்.

## குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிலி நாட்டுத் தம்பதியிடமிருந்து லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில், இரண்டு குடிவரவு - குடிய கல்வு அதிகாரிகளைக் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் சேவை யிலிருந்து இடைநிறுத்தியிருக்கிறது.

சிலி நாட்டு தம்பதியினருக்குத் தற காலிக விசா பெற்றுக்கொடுப்பதற்கு- 50 டொலர் பணத்தை இருவரும் லஞ்சமாகப் பெற்றுள்ளனர். மேற்படி தம்பதிகள் கொடுத்த தகவல்களை யடுத்தே, இந்த அதிகாரிகள் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகத் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமாயின் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபடவேண்டும்!

## தேசிய சங்க சம்மேளனம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இவ்வாறு தேசிய சங்க சம்மேளன அதியுயர்சபை - ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்ப தற்கு, ஜனாதிபதிக்குச் சமர்ப்பித் துள்ள யோசனைகளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு - கிழக்கில் உள்ள பௌத்த சின்னங்கள், பௌத்த ஆலயங்களைப புனரமைப்பது தொடர் பான நடவடிக்கை எடுப்பது மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாட்டு அம்சங் களை மக்களுக்கு அறிவித்து, தெளிவுபடுத்துவது ஆகிய மூன்று அம்சங்களையும் அதியுயர்சபை - ஜனாதிபதியிடம் முன் வைத்துள்ளது.

இந்த மூன்று யோசனைகளை யும் தேசிய சங்க சம்மேளன அதி யுயா சபையின் தலைவர் மேற்றா ணந்த தேரர் - ஜனாதிபதியிடம் கைய ளித்தார். (01)

## உலகின் உயரமான நடராஜர் சிலை சென்னையிலிருந்து சுவிஸ் பயணம்!

இரண்டுதொன் எடையும், 11 அடி உயரமும் கொண்ட உலகி லேயே மிகப்பெரிய பஞ்சலோக நடராஜர்சிலை - நேற்று சென்னை யிலிருந்து விமானமூலம் சுவிட்ஸர் லாந்து நாட்டுக்குக் கொண்டுசெல் லப்பட்டது.

சுவிட்ஸர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரிலுள்ள அணுசக்தி நிலையத் தில் இந்தச் சிலை வைக்கப்படும். சுவிஸ் நாட்டின் கோரிக்கையை ஏற்று, இந்திய அணுசக்திக் கழகம் இந்தச் சிலையை வழங்குகிறது.

இநதச்சிலை கும்பகோணம், சுவாமி மலைக்கு அருகேயுள்ள திம்மங் குடியில் உருவாக்கப்பட்டது. பஞ்ச லோக சிலைகளை உருவாக்குவ தில் இந்தக் கிராமச் சிற்பிகள் பெயர் பெற்றவர்களாவர்.

கடந்த 6 மாதங்களாக 24 சிற் பிகள் இரவும் பகலுமாக உழைத்து, உலகில் உயரமான இந்த நடராஜர் சிலையை வடிவடிமைத்தனர்.

15 லட்சம் இந்திய ரூபா செல வில் இந்தச் சிலை உருவாக்கப்பட் டுள்ளது. ஆகம விதிகளுக்கு உட் பட்டு, இந்தச் சிலைக்கு உரிய பூசை க்ள் செய்யப்பட்டன.

சென்னைக்குக் கொண்டுசெல்லப் பட்ட இந்தச்சிலை - நேற்று விமான மூலம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட் டது.

# கொலன்னாவ எரிபொருள் குதங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு!

கொலன்னாவலில் உள்ள எரி பொருள் களஞ்சியத் தொகுதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக் கிறது. கொலன்னாவ எரிபொருள் களஞ்சியத்தொகுதி - விடியோ மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டதாகப் பொலி ஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்தே, பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டிருக்கிறது.

அந்த எரிபொருள் களஞ்சியத் தொகுதியில் பாதுகாப்புத் தொடாபாக ஆராயும் கூட்டமொன்று கடந்தவாரம் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் உயர் பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், களஞ்சியத் தொகுதி யின் பாதுகாப்பு அதிகாரிகள் மற் றும் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கொலன்னாவ எரிபொருள் களஞ்சியத் தொகுதி யின் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாக, விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப் புக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கிறது.

இந்த எரிபொருள் களஞ்சியத் தொகுதி வளவுக்குள் - படையின ரால் பயன்படுத்தப்படும் - இடங்கள் தொடர்பான விபரங்களைக் கணிப்பி டும் கருவியொன்று கண்டுபிடிக்கப் பட்டதையடுத்தே, பாதுகாப்பு அச் சுறுத்தல் ஏற்பட்டதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, எரிபொருள் களஞ்சியப் பாதுகாப்பு அதிகாரிகள்- அருகிலுள்ள சகஸ்புர கட்டடத் தின் உச்சியில் பாதுகாப்பு அர ணொன்றை அமைக்கவேண்டுமென் றும், இதன்மூலம் சுற்றுப்புறத்தைக் கண்காணிக்கமுடியுமென்றும் அதி காரிகள் தெரிவித்தனர்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருவப்படங்கள் அடங்கிய நினைவுப் பந்தல் திறப்பு விழாவில், மட்டு - அம்பாறை மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ரமணன் தேசியக்கொடியேற்றுவதையும், நிகழ்விற்கு வருகைதந்த புலிகளின் முக்கிய பிரமுகர்கள் அழைத்துவரப்படுவதையும், அவர்கள் திருவுருவப் படங்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகளைத் தடுக்க படையினருக்கு விசேட உத்தரவு வழங்கவில்லை

## கேணல் சுமித பெரேரா பேட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதைத் தடுப்பதற்கு இராணுவத்தினருக்கு விசேட உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லையென - இராணுவத்தரப்பு பேச்சாளரான கேணல் சுமித பெரேரா தெரிவித்தார்.

தற்போது யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் - மாவீர்தின நிகழ்வுகளில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மீது மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் குறித்து, லண்டன் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

மாவீரர் வாரம் என்பது விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கின்ற அரசியல் நோக்கம்கொண்ட ஒரு நிகழ்வு. இது தொடர்பான அரசியல் நிகழ்ச்சிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நடைபெறுகின்றன. அவற்றை நாங்கள் அனுமதித்திருக்கின்றோம்.

என்னைப் பொறுத்தவரையில், அரசியல் நிகழ்வுகள் நடக்கலாம், அவற்றுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றோம்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆயுதம் கொண்டு செல்லாதவரையில், அவர்கள் சுதந்திரமாக நடமாடலாம். எனவே, இந்த நிகழ்வின் போது எவ்வித அச்சுறுத்தலோ, பாதுகாப்பு பிரச்சினைகளோ வருமெனக் கருதவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ் 'நமது ஈழநாட்டின் ஓராண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற வட. இந்து மகளிர் கல்லூரி மாணவி உமா இளையதம்பிக்கு - கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசில் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (116)

# மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் அடுத்த மாதம் வழங்கப்படும்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவாகளுக்கான இலவசப் பாடநூல்கள் - அடுத்த மாதம் முதல் வழங்கப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, இந்த நூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும். இந்த நூல்களை முன்கூட்டியே வழங்குவதன்மூலம், விடுமுறைக் காலங்களில் மாணவர்கள் அதனைக கற்பதற்கு வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஒருதொகுதி அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்திற்கு வந்துள்ளன

மேலும் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் நேற்றுமுன்தினம் கிடைக்கப் பெற்றதாக யாழ். செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆவணிமாதம் வரவேண்டிய 2 ஆயிரம் அடையாள அட்டைகளே, சில தடங்கல்கள் காரணமாக நேற்று வந்து சேர்ந்துள்ளதாகவும், அவற்றைப் பாடசாலைரீதியாக அனுப்பியோர் - பாடசாலை அதிபரின் ஊடாகவும், கிராம சேவையாளர் ஊடாக அனுப்பியோர் - கிராமசேவையாளர் ஊடாகவும் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ப)

# சபரிமலை யாத்திரிகர்களுக்காக இந்திய தூதரகம் விசேட ஏற்பாடு

சபரிமலை ஐயப்பபக்தர்கள் மேற்கொள்ளவுள்ள யாத்திரைகளுக்கு உதவும் முகமாக - கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் விசா வழங்குவதற்கென விசேட கருமபீடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இயங்கி வரும் ஐயப்பபக்தர்களின் சங்கம் - இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு விடுத்த கோரிக்கையை அடுத்தே, இந்தியத் தூதரகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

இது தொடர்பாக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் க.பரமலிங்கம், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் குமார்வடிவேல் ஆகியோர் - இந்தியத் தூதரகத்தின் விசா அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு அமைய, எதிர்வரும் டிசம்பர் முதல் வாரத்திலிருந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இந்த விசேட கருமபீடம் திறந்திருக்குமெனவும்,

இதேவேளை ஐயப்பபக்தர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் - இந்து கலாசார அமைச்சினால் விநியோகிக்கப்படவுள்தாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவுக்கற்கள் நாட்டப்படுகிறது

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் - உடுத்துறையில் மாவீரர் துயிலும் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வீரச்சாவடைந்த அறுநூற்றுக்கு மேற்பட்ட மாவீரர்களுக்கு, நினைவுக்கல் நாட்டப்பட்டு வருகிறது.

இந்த மாவீரர் துயிலும் இல்லம் - நவம்பர் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தப் பிரதேசத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு, நாளை உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

## கால்நடை அபிவிருத்தி நிலையம் திறப்பு

வடமராட்சி பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி, மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக கால்நடை அபிவிருத்தி விற்பனை நிலையமொன்றை திறந்து வைத்துள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் கால்நடை தீனி வகைகள், கால்நடை மருந்துவகைகள், கால்நடை வளர்ப்பு உபகரணங்கள் நியாயமான விலையில் - கால்நடை வளர்பபோருக்கு வழங்கப்பட்டுவருகிறது.

இந்த நிலையத்தில் சுத்தமான தயிர், நெய் போன்ற உற்பத்திப் பொருட்களை - விற்பனையாளர்கள் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

## சம்பந்தர் விருது

கடந்த ஆண்டுக்கான சம்பந்தர் விருது - மூத்த படைப்பாளி சு.வேலுப்பிள்ளை ஆக்கிய சிறுகதைத் தொகுதியான பாற்காவடி என்ற நூலுக்கு வழங்கப்படுகிறது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக, ஈழத்து முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தரின் பேரால் வருடாவருடம் இந்த விருது வழங்கப்பட்டுவருகிறது.

ஈழத்தின் புகழ்பூத்த படைப்பாளிகளில் சு.வேலுப்பிள்ளை முக்கியமானவர். 1949 ஆம் ஆண்டில் இலக்கியத்துறையில் கால்களைப் பதித்தவர். ஈழகேசரி பண்ணையில் உருவாகியவர். மண்வாசனை பாற்காவடி, வத்தகைப்பழம் என்பன அவரது சிறந்த படைப்புக்களாகும்

## குன்றும் குழியுமாக உள்ள வீதி

மல்லாகம் சந்தியிலிருந்து நீதிமன்ற வீதியூடாக அளவெட்டிக்குச் செல்லும் பாதை, குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. மழை காலத்தில் நீர் நிரம்பி நிற்பதால், மக்கள் போக்குவரத்தின்போது பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியைப் பிரதேச சபையோ, வீதி அபிவிருத்தி அதிகாரசபையோ கவனத்தில்கொள்ளாததையிட்டு, மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (72)

# மன்னார் சவுத்பார் கடற்பரப்பில் சிங்கள மீனவர் மீன்பிடிக்கத் தடை

மன்னார் - சவுத்பார் கடற் பகுதியில் மேலதிகமாக சிங்கள மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி மறுப்பதாக, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் தலைமையில், மன்னார் அரச அதிபர் பணிமனையில் இடம் பெற்ற கலந்துரையாடலிலே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் பங்குத் தந்தை எபிலிஸ்னூஸ்பிள்ளை, நீர்கொழும்பு சிங்கள மீனவர் சங்கத்தைச் சேர்ந்த வருணகுலசூரியசுனில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தற்போது மன்னார் - சவுத்பார் கடற்பகுதியில், நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவர்களின் 16 மீன்பிடிப்படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும்,

இந்தப் படகுகளைத்தவிர, மேலதிகமாக சிங்கள மீன்பிடிப்படகுகள் இப்பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இன்றைய சந்திப்பில் அனுமதி மறுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

# கைத்தொழில் பேட்டை ஒன்று அச்சுவேலியில் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் - கைத்தொழில் பேட்டை ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரோஹித பொகல்லாகம தெரிவித்துள்ளார்.

இந்த கைத்தொழில் பேட்டையை நிர்மாணிப்பதற்கு 100 மில்லியன் ரூபா தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

மேலும் கைத்தொழில் பேட்டை அமைக்கப்படுவதற்கான காணி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# யாழ்.நோக்கி வந்த வானில் கொள்ளை

## அனுராதபுரம் பகுதியில் சம்பவம்

யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த டொல்பின் வானை மறித்து, பயணிகளிடம் கொள்ளையிட்ட ஆயுதக் கும்பல் ஒன்று, காட்டிற்குள் சென்று தலைமறைவாகியுள்ளது.

நேற்று முன்தினம் அனுராதபுரம் நொச்சியாகம பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து ஒன்பது பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த டொல்பின் வானை, நொச்சியாகம பகுதியில் வைத்து வழிமறித்த திருடர் கும்பல் ஒன்று, ஆயுத முனையில் அவர்களைக் காட்டுப் பகுதிக்கு அழைத்துச்சென்று, அவர்களிடம் இருந்த பணம், நகைகளை அபகரித்துவிட்டு அங்கிருந்து காட்டிற்குள் ஓடி மறைந்துள்ளது.

கொள்ளையர்களால் 95 ஆயிரம் ரூபா பொறுமதியான பணமும், 25 பவுண் நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இவர்களில் அநேகர் வெளிநாடுகளிலிருந்து வந்து, கொழும்பில் தங்கியிருந்துவிட்டு, யாழிலுள்ள உறவினர்களைச் சந்திப்பதற்காக வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (தீ)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்

பெயர் : பு.ரம்மியா
முகவரி : கச்சாய் வீதி, கொடிகாமம்



ஐந்தாவது அகவையில்



பெயர் : வி.எஸ்.ஆர்.ஜீசஸ்கிங்
முகவரி : உடுவில் தெற்கு, உடுவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------
முகவரி :----------------------------------------
பிறந்த ஆண்டு:----------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றோர் ஒப்பம்

## இலக்கியச்சோலை

# தனிவளை வாழ்வுக்கு தவமிருத்தல்

இப்படியே போனா இனி விசராக்கிப் போடும். மழைவிட்டும் தூவானம் நிக்கேல்லை எண்ட கதையா? இன்னும் எத்தனை நாளைக்கோ? ஆசறுதியாய் ஓரலுவலும் பாக்கேலாமலுக்கு - இருப்பதுக்கு, இருபதடி நிலத்தில கோழிக்கூடுமாதிரி ஒரு குடிசை - அதிலையும் இரண்டு குடும்பத்தை இருத்தினால்.. மூச்சு விடவும் ஏலாது. எல்லாப் பிள்ளையளும் உன்னைப்பார், என்னைப்பாரெண்டு வளர்ந்து நிக்குதுகள். மூத்தவளும் இண்டைக்கோ நாளைக்கோ வெண்டு, என்ர வயித்திலை மிளகாய்த்தூளைக் கொட்டிக் கொண்டு நிக்கிறாள். இன்னும் எத்தனை நாளைக்கிந்த நரக வாழ்க்கையோ? இஞ்சையே நான் செத்துப் போவனோ? ஆருக்குத் தெரியும்.'

'குருவிக் கூட்டைக் கல்லெறிஞ்சு கலைச்சமாதிரி, அறுவார் தொண்ணூறாமாண்டு வெறிக்கூத்தாடி, எங்களைக் கலைச்சுவிட்டாங்கள். இப்ப நினைச்சாலும் வயிறு பத்தி எரியும். பாதுகாப்பு வலயமாம் - பணியார வலயம். அப்ப தென்பகுதியில சேகுவரா ஆக்கள் ஆமிக்கு அடிக்கேக்குள்ள, உவங்கள் தங்கடை முகாம்களைச் சுத்தியிருந்த சனத்தைக் கலைச்சு, உந்தப் பணியார வலயத்தைப் போட்டவங்களோ? தெரியாமறகேக்கிறன். ஏனென்டா, அது சிங்களவன்ரை வீடு. சிங்களவன்ர காணி. அவங்கடை ஆக்கள். ஆனால், நாங்கள் தமிழர். எங்களைக் கலைக்கலாம், மிளகாய் அரைக்க வசதியான தலை எங்கடை தலைதான்!'

எங்கடை இடத்தில எண்டால், என்னவடிவாச் சீவிக்கலாம். வளவிற் தென்னையளின்ர தேங்காயளே காணும் சிலவுக்கு. எல்லாம் உருந்து கொட்டுண்டு போச்சு. எந்த நாளும் கூலிவேலை கிடைக்குதே. பிள்ளையள் வயிறு குளிர. ஆனவாயில மூண்டுவேளையும் திண்டு, எவ்வளவு நாளாச்சு. பள்ளிக்கூடமும் இல்லை, படிப்பும் இல்லை. ஆனா வாயில தீனுமில்லாமல், வளருர பிள்ளையள் மூண்டும் பாவம். இவள் பாவியும் நொந்து நூலாப் போனாள். தமிழனாப் பிறந்தவனின்ர தலைவிதி இதுதான்.

பொங்கு தமிழில, 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்' எண்டு கோசம் எழுப்பேக்க, எனக்குத் தொண்டையைக் கட்டி அழுகை வந்திட்டுது. அந்தப் பாம்புகள் சுத்தியிருந்த வீட்டை பிச்செறியேக்க, வலுசந்தோசமாயிருந்தது. - கூட இப்பிடியொருநாள் எங்களுக்கு எப்ப வரப்போகுது எண்டு கவலையாயுமிருந்தது. அந்த மந்திரியைக் கம்பசுக்குள்ளை போகவிடாமல் பிள்ளையள் நிப்பாட்டி திருப்பிவிட்டது சரியான அடி. உவங்கள் எங்களுக்கு என்ன செய்தவங்கள். எலக்சன் நேரம் இங்கை படையெடுத்து வந்து, 'நாங்கள் வெண்டால், முதல் வேலை உங்கடை பிரச்சனையைத் தீர்க்கிறதுதான்' எண்டு வாய்முழுக்க பல்லாகச் சொல்லி, வோட் எடுத்து வெண்டாப்போல, இந்தப் பக்கமும் திருப்பிப் பாராமல் இருக்கிற இவையளுக்கு வெளுக்கவேண்டும் துவரங்கம்பால.

உந்த மந்திரிமாரும், எத்தினை தரம் சொகுசாக வாகனங்களில் வந்திறங்கிப் பாத்துப்போட்டுப் போறாங்கள். ஒரு சததுபிரியோசனமும் கிடைச்சபாடில்லை. போதாக் குறைக்கு - என்ஜீயோகாரரும் விதவிதமான உடுப்புகளோட வந்து, குறைகளைக்கேட்டு பதிஞ்சுகொண்டு போவாங்கள் அவ்வளவுதான்.

'ஒரு குச்சு வீட்டுக்குள்ளை ஒரு குடும்பமே இருக்கேலாது. போதாக்குறைக்கு இன்னொரு குடும்பத்தையும் கொழுவி, நிம்மதியாச் சரிஞ்சு படுக்க ஏலுமே? அதுக்கை எங்களோட விடிஞ்சாப் பொழுதுபட்ட கசிப்பால முகங்கழுவிற ஒருத்தனைச் சேத்துவிட்டு, நாங்கள் படும்பாடு. பெண் புரசுகளை வைச்சுக்கொண்டு நாங்கள் படுகிற கரைச்சல்.. பூசையன் கசிப்பில முழுகிப்போட்டு வந்து, கதைக்கிற தூசணங்கள் காது குடுத்துக் கேக்கேலுமே? பனைபோல வளர்ந்த அவன்ர காவாலிப் பொடியளின்ரை பார்வை, மனிசி, பிள்ளையள் உடுப்புமாத்திறதுக்கும் படுகிற கஸ்ரம். காவாலி பொடியள் அதுகள் உடுப்புமாத்திற நேரம் பாத்து பிடிச்சுவைச்ச பிள்ளையார் கணக்கா வீட்டுக்குள்ளையே இருந்து கொள்ளுங்கள். தம்பி கொஞ்சம் வெளியில போறீயளோ, பிள்ளையள் உடுப்பு மாத்தவேணுமெண்டு சொன்னால், முறைச்சு முறைச்சுப் பார்த்துப் போட்டுத்தான் வெளியில போகுங்கள். ஒவ்வொருக்காலும் மினக்கெட்டு மூதேசியளுக்கு சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். பிறகு அந்தப் பூசையன் வெறிபோட்டுக் கொண்டுவந்து, 'உவரட்டத்தான் கண்டறியாத காமதேனு பெம்பிளையள் இருக்கினம். அவையின்ரை விசித்திரங்களை மற்றவை பாத்துப்போடுவினமாம். எல்லா பெம்பிளையளுக்குமிருக்கிறது தானேயிருக்கும். எண்ட நொட்டை கதைக்கேக்க, கொலைசெய்யிற ஆத்திரம் தான் வரும். பிறகேன் வீண்சோலியெண்டு பல்லைக் கடிச்சுக் கொண்டு செகிடன்மாதிரி இருக்கிறன். பொறுப்பாயிருக்கிறவங்களும் சொல்லிப்பாத்திட்டன். ஒரு பிரியோசனமுமில்லை.

எங்கடை இடத்தில எண்டால் ஒரு நாள் வீச்சுக்குப் போனாலே இரண்டு மூண்டு கிழமைக்கு இராசா மாதிரிச் சீவிக்கலாம். இது இஞ்சை காலம வெளிக்கிட்டா, ஏதேனும் கூலிவேலை - அங்கின இங்கின வீடுகளில கிடைக்கும். அதுகும் கிடைக்கிற கூலி, ஒரு நாளைக்கு தும்மவும் காணாது. தொழில் முடிஞ்சு வந்தால், கனநேரம் சும்மா முகட்டைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிதுதான். அதாலயும் பெரிய சோலிதான். சில கொசப்புக்கள் கசிப்பை இறக்கிக் கொண்டுவந்து சத்தம் போட்டுக்கொண்டிருக்குங்கள். சத்தம் போடாதையப்பு எண்டாலும், வில்லங்கந்தான். பிறகு வீண்பிரச்சினையள் வந்து... அதால, காலம வெளிக்கிட்டா வேலையொண்டும் கிடைக்காட்டி, எங்கையேனும் மரங்களுக்குக் கீழை படுத்திட்டு, பின்னேரக்கைக்குத்தான் திரும்பிவருவன். எங்கடை இடத்தில எண்டால் வீச்சுக்கு போற நேரம் போக, மிச்சம்நேரம் வளவில் தென்னையளால விழுகிற தேங்காயளை உரிக்கவும், கிடுகு பின்னவும் கணக்காயிருக்கும். அடுத்த நாளைக்கு இவள் பாவி, அவ்வள தேங்காயளையும், கிடுகுகளையும், பொச்சுக் குவியலையும் வித்துக் காசாக்கிக் கொய்யகத்தில முடிஞ்சுவச்சிருப்பாள்.

மயிலிட்டியில எங்கடை வீடு கொட்டில் வீடு. ஆனால், என்ன சந்தோசமாயிருந்தம் - சீவியமும் கஸ்ரமில்ல - நிம்மதியாக் கிடந்தெழும்பினம். ஒரு கரைச்சலுமில்ல. பிள்ளையளும் ஒழுங்கா பள்ளிக்குப் போய்வந்துதுகள். நல்லாப் படிச்சுதுகள். அறுவார் எண்டைக்குப் பாதுகாப்பு வலயம், பணியார வலயம் எண்டு எங்களைக் கலைச்சு விட்டாங்களோ, அண்டைக்கே எல்லாம் தலைகீழாப் போச்சு. இஞ்சை நினைச்சநேரம் ஒண்டுக்கு ரண்டுக்குப் போகேலுமே. ஆரச்சோரக்குளிக்கேலுமே. ஆயிரத்துச் சொச்சம் பேருக்குப் பதினெட்டுக் கக்கூசும், அஞ்சு குழாய்க் கிணறும் என்னத்தைக் காணும். காலம எழும்பி புறம்புக்குப் போறதுக்கு லைனில நிக்கவேணும். குளிக்கிறதுக்கும்தான். அதுக்குள்ள பெண் பிரசுகள் குளிக்கிறதுக்கொண்டு அறுக்கையான மறைப்பிருக்கோ? கிடுகுகளால தொந்து பொறியிற ஒரு மறைப்பு. அதையும் உந்தக் காவாலிக்கூட்டம் பிரிச்சுவிட்டுவிட்டு, ஒட்டி நிண்டு பாக்குங்கள். பெண் சகோதரங்களோட பிறக்காத சென்மங்கள் பொறுப்பான ஆக்களுக்கு சொன்னாலும் காதில விழுத்த மாட்டாங்கள். சொல்லுற ஆக்களோட எரிஞ்சு விழுவாங்கள், குறுக்காலைபோவார்.

எங்கடை பிரச்சினையள விளங்கப்படுத்தி, அமைச்சருக்கு எத்தினை கடிதம் இதுவரைக்கும் எழுதிப் போட்டம். என்ன பிரியோசனம். 'உங்கடை கடிதம் கிடைச்சது' எண்டொரு பதில் ஒண்டுமில்லை. ஆனால், ஆக்கள் இல்லாத உயர் பாதுகாப்பு வலயத்தில இருக்கிற கோயிலையெல் லாம் திருத்திறதுக்கு இலட்சம் இலட்சமா சிலவழிக்கினம். உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்ளால வெளிக்கிட்டுவந்து, உந்த கடவுளுகள் எங்களுக்கு உதவி செய்யுமோ?'

'அங்க எங்கடை வீட்டு வாசல், பயிர் பச்சையெல்லாம் இருக்குமோ? அறுவார் விட்டிருப்பாங்களே? எல்லாத்தையும்



ஆனைமிதிச்சதுபோல, துவைச்சு வைச்சிருப்பாங்கள். நாங்கள் இரத்தத்தைப் புழிச்சு, வேர்வை சிந்தி உழைச்சு, ஒவ்வொரு சதம் சதமாச் சேத்துக்கட்டின வீடு. அது அழிஞ்சாலும் போகட்டும், எங்கடை இடத்துக்கு எங்களைப் போகவிட்டாக் காணும் - இராசா மாதிரிச் சீவிப்பம். இந்த நரக வாழ்க்கையை எவ்வளவு காலத்துக்கு வாழுகிறது. இப்பிடி வாழுறத்தை விடச் சாகலாம். அது எவ்வளவோ நல்லது. இந்தச் சீரழிவுகளைப் பாக்க, தலைவீங்கி வெடிச்சிடும்போல கிடக்கு. எங்கடை இடத்திலேயே நாங்கள் வாழேலாத நிலைமை. எங்கடை வாழ்க்கையின்ர நன்மையளையெல்லாம், கறையான் அரிச்சுப் போட்டுது. நாங்கள் இத்துப்போய் கிடக்கிறம். இந்த மண்ணில பிறந்து, இந்த மண்ணில வளர்ந்து வந்த எங்களுக்கு, சொந்த வீடு வாசலில் படுத்தெழும்பமுடியாதநிலை.

உந்தப்புரிந்துணர்வு உடன்படிக்கையில இரண்டு பகுதியும் கையெழுத்துப்போட்டு, இருபது இருபத்தொரு மாதமாச்சு. ஆறுசுற்றுப்பேச்சும் முடிஞ்சுது. எங்கடை நிலையில ஏதும் மாற்றம் வந்ததோ. எங்கட பொடியள் முந்தின பேச்சுக்களில் எங்கடை பிரச்சினையள அறுத்துறுத்துக் கதைச்சமாதிரி, தொடர்ந்தும் அறுத்துறுத்துக் கதைச்சாத்தான், ஏதும் தீர்வு கிடைக்கும் எங்கடை பிரச்சனைக்கு. உந்தக் குஞ்சுக்கிழவன்- 'இயக்கப் பொடியள் நாட்டுக்கு நாடுபோய் அரசாங்க ஆக்களோட சிரிச்சுப்பேசி, கைகுலுக்கி, போட்டோக்களுக்கு நிண்டது தான் மிச்சம். எங்கட பிசகுகளுக்கு இண்டைவரைக்கும் உருப்படியா ஏதும் தீர்வுவரையில்லை. எல்லோரும் நல்லா நடிக்கிறாங்கள்' என்று சொன்னது - எனக்குச் சரியான கோபத்தைக் கிளப்பிப்போட்டுது. எங்கடை உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற பொடியள் - பேச்சை நிப்பாட்டினதுகூட, எங்கடை பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கவேண்டும் எண்டுதான். 'விளங்காமல் வாய்க்குவந்தபடி விசர்க்கதை பறையாதை' எண்டு முறையாக்குடுத்தன். உந்த எம்.பிமாரும், மந்திரிமாரும் - விலாங்குகளா நீந்தித்திரிய, எங்கட பொடியள் இருக்கிறபடியால்த்தான் இந்தப் பிரச்சனையைப் பற்றி கதைக்கிறாங்கள். உது சிலருக்கு விளங்காமல், விசர்கதை பறைஞ்சு கொண்டு திரியினம்.'

'சதீஸ் நம்பியார் எண்ட வடக்கத்தையானுக்கு, எங்கட பிரச்சனைகளைப் பற்றி ஒரு மயிரும் தெரியாமலுக்கு அறிக்கை சமர்ப்பிச்சுப்போட்டு, இளிச்சுக்கொண்டு நிக்கிறான் பேக்கிணாந்தி. அறிக்கையை வாசிச்சுப்பாத்தா - உவனுக்குப் பச்சை மட்டையால சாத்தவேணும்போல இருந்துது. ஏதோ எங்களில் பெரிய அக்கறையுள்ள ஆக்கள்மாதிரிப் பாஞ்சு விழுந்துவந்து, அறிக்கை சமர்ப்பிக்கினம். ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுததாம்!'

'எங்கடை பிரச்சினையள விளங்கிக்கொள்ள வேணுமெண்டா, எங்கடை நிலையில இருந்து பாக்கவேணும். எங்கடை உணர்வுகளை விளங்கிக்கொள்ள வேணும். மந்திரிமாருக்கென்ன, அடிக்கடி ஏசி வாகனங்களில் ஏறி வருவினம். எம்.பிமாருக்கென்ன, எப்பவும் ஏசி வாகனங்களில் வருவினம். கார், வீடு, பிளேன்ரிக்கற் எண்டு எல்லாம் இலவசம். காவலுக்கு ஆக்கள், பிள்ளையள பெரிய பள்ளிக்கூடங்களில் விட்டு படிப்பிப்பினம். பெரிய படிப்புக்கு வெளிநாடுகளுக்கும் அனுப்புவினம். வெளிநாடுகளில வீடு காணி வாங்கிவிடுவினம். வங்கிகளில் கணக்குத் திறந்து காசு நிரப்புவினம். விதம் விதமா உடுப்பினம், அவையின்ர மனிசிமார் நாளுக்கொரு நகையும், மணித்தியாலத்துக்கொரு உடுப்பும் போடுவினம். உவங்களுக்கு எங்கை எங்கடை கஸ்ரம் விளங்கப்போகுது. உவங்கள் எல்லாரையும் பிடிச்சுவந்து, ஒருகிழமைக்கு இந்த முகாமில அடைச்சு வைச்சால், அப்ப விளங்கும் எங்கடை கஸ்ரம்.

எங்கடை பிரச்சினையை ஏன் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாப் பாராமலுக்கு, இராணுவப் பிரச்சினையாப் பாக்கினம்? எங்களை மனிசப்பிறப்புக்களாகத் தெரியேல்லப்போல கிடக்கு. உந்த மந்திரிமாரும், எம்.பிமாரும் தங்களுக்கு எப்பவேனும் பொழுதுபோகுதில்ல எண்டால்தான், எங்கடை பிரச்சினையளப்பற்றி பேப்பரில வெட்டுவன், புடுங்குவன் எண்டு ஏதேனும் அறிக்கைவிடுவினம். பிறகு எல்லாம் மறந்துபோகும். இருந்திட்டு ஏதேனும் எங்களைப் பற்றிக் கனவுகண்டா, எழும்பி அறிக்கை விட்டுட்டு, பேந்து நித்திரையாப் போவினம். எலக்சன் வருகுதெண்டால், விழுந்தடிச்சு ஓடியருவினம். இனி இந்தப் பக்கம் வரட்டும், பச்சை மட்டையால குடுத்துக் கலைக்கிற திட்டத்திலதான் இருக்கிறம். நெடுகலும் எங்கடை நெருப்பில உவை குளிர்காய, நாங்கள் எரிஞ்சு சாம்பலாகேலுமே, நல்ல சேட்டைதான்.

ஓரளவு வசதியள் இருந்துதெண்டா வீச்சுக்கெண்டாலும் போகலாம். இவள் பாவியின்ர காதான், கழுத்தான் எல்லாம் வித்துச் சுட்டுத் திண்டாச்சு. என்ன கிடக்கினிவிக்க. இப்ப வீச்சுக்குப் போறதிலயும் வில்லங்கந்தான். இந்த வலயப்பிரச்சினையால, வீச்சுக்குப் போறாக்களுக்குத்தான் பெரிய வில்லங்கம் - கரையோரப் பக்கமெல்லாம் ஐநூறு மீற்றர் தூரத்துக்கு அறுவாரின்ர காம்புகள் இருக்கு. அங்கின இருக்கிற ஆக்கள் வீச்சுக்குப் போறதெண்டால், அடையாளக் காட்டைக் காட்டினால் மட்டும் காணாதாம். எல்லாத்தையும் திறந்து காட்டவேணுமாம். எங்கடை இடத்தில நினைச்சநேரம் வீச்சுக்குப் போகேலாது, நினைச்ச நேரம் திரும்பிவரேலாது. எல்லாம் சந்திரிகா அம்மாவின்ர புண்ணியம். கடலில ஏதும் ஆபத்தெண்டாலும் கரைக்குவரேலாது. உந்த ஆறுவார் எப்பதான் பரிநாசமாப் போவாங்களோ

சண்டையில இடிஞ்ச ஐஸ் பக்ரறியைத் திரும்பவும் கட்டத் தொடங்கேக்குள்ளகூட, உவையள் வந்து நிப்பாட்டிப் போட்டாங்களாம். பக்ரறி அவையின்ர வலயத்துக்குள்ளை வருகுதாம். பின்னைக் கேளன் கதையை - உப்படியே போனால், நாங்கள் மூத்திரம் பெய்யிற இடமும் அவையின்ரை வலயத்துக்குள்ள வரும். இனி நீங்கள் என்ன செய்யிறது பேசாமலிருக்க வேண்டியதுதான். எல்லாரும் சமாதானகாலம், சமாதானகாலம் எண்டு கத்திக் கொண்டு திரியினம். எங்கடை வாழ்க்கையில ஒரு மாற்றமும் இல்லை. *(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)*

**கார்த்திகா** கரவெட்டி

## தமிழே நீ என்றும் வாழ்கிறாய்

ஈழவள நாட்டினிலே
பாவையவள் பேச்சினிலே
பார்புகழும் பாட்டினிலே
பாரதியின் கவிதையிலே
பைந்தமிழே நீ வாழ்கின்றாய்!

மஞ்சத்தின் கொஞ்சலிலே
சங்குதன் முழக்கத்திலே
சங்கீத சந்தத்திலே
செந்தமிழே நீ வாழ்கின்றாய்!

குயிலின் பாட்டினிலே
குளவியின் மழலையிலே
குமரியவள் சிரிப்பினிலே
கொஞ்சும் தமிழே நீ வாழ்கின்றாய்!

வள்ளுவன் வார்த்தையிலே
வான்புகழும் ஏட்டினிலே
வைரமுடைய நெஞ்சந்தனிலே
கவிஞனின் வார்த்தையிலே
கல்வி என்னும் கண்களிலே
தேன் தமிழே நீ வாழ்கின்றாய்!

புதுமை என்னும் வேகந்தனிலே
புரட்சியின் வடிவிலே
புத்தொளி பரப்பி – நாளும்
தமிழே நீ வாழ்கின்றாய்!
என்றென்றும் வாழ்வாய்...!
என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பாய்...!

சு.சுபோதினி

## சுதந்திரத்து மூச்சினையே சூடிக்கொள்ளு தோழா



சொந்த வீடு பார்க்க வேணும்
சோர்வு வேண்டாம் தோழா
வந்தபகை நீங்கியினி
வழிகள் செய்வாய் தோழா!

உன்னுரிமை அனுபவிக்க
உரிமையுண்டு தோழா
அந்நியரின் ஆதிக்கத்தை
அகற்றவேண்டும் தோழா!

அகதியென்ற அந்தஸ்து
அகற்ற வேண்டும் தோழா
தமிழனென்ற தகமையது
மனதில் கொள்ளு தோழா!

உணர்வுகளை ஊமையாக்கி
உடைத்திடாதே தோழா
உணர்வுகட்கு உரத்தையூட்டி
உயிர்பெறுவாய் தோழா!

ஆகுதிகள் ஆனதெல்லாம்
அழிவதில்லை தோழா
வேகமது கொண்டிடு நீ
வேளை தோறும் தோழா!

சுதந்திரத்து மூச்சினையே
சூடிக்கொள்ளு தோழா
நிதமும் உந்தன் வாழ்வுதனில்
நிறைவுகாணு தோழா!

சூரியநிலா

## மக்களாட்சியின் மன்னர் நாம்!



எம்மைத் தெரிகிறதா? எங்கள் குரல் கேட்கிறதா?
நாமும் மனிதர்தாம்! நவயுகத்தின் குடிகள் தாம்!!
எங்கள் வாழ்வினையே என்றோ தொலைத்தமையால்
புகையிரத நிலையமுமே புகலிடமாய்ப் போனதுவே.

மக்களாட்சியென்று மார்தட்டும் பூமியிலே
மண்ணிழந்து மனையிழந்து மாளும் மனிதர் நாம்!
கடலோரக் கனவுகளோ கலைந்து போனதனால்
உடலோடும் உயிரோடும் உலவும் குடிகள் நாம்!

ஆசைப் படகினிலே அலையோடு போராடிக்
கிள்ளிய மீன்களுமே கிட்டாது போனதனால்
அயலார் வந்திங்கு அள்ளிச் செல்கையிலே
அழுத விழிகளுடன் அதிகளாய்ப் பார்த்திருப்போம்!

காணிகள் தோறும் கண்ணிகள் காத்திருக்கும்
உயர் வலயத்தில் உயிரெல்லாம் அடங்கும்
வள்ளமும் வலைகளும் வாழ்வுமே இழந்து
அகதிகளானோம் அவனியில் இன்று.

ஓதிப் பார்த்தே தான் ஒரு வழி கண்டிட்டோம்
இரந்து பெறவிங்கு இனியென்ன இருக்கிறது?
சாதுவாய் இருந்திட்டால் சாவிலே முடியும்
சாதனை புரியென்று சரித்திரம் ஒலிக்கிறது.

# கவிதைச் சோலை

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது மாதிரியேதான் இருக்கிறம்.

உண்மையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நடந்தவுடனும் எங்களுக்கு நல்ல புளுகு. இனி ஒரு கரைச்சலுமில்லை, நாங்கள் எங்கடை இடத்துக்கு நல்லவடிவாத் திரும்பிப் போகலாம் எண்டிருந்தம். ஆனால், நாவூறுபட்ட மாதிரி, புரிந்துணர்வு ஒப்பந்தம் நடந்து இவ்வளவு காலமாச்சு - நாங்கள் இருந்த இடத்தால ஓரடியும் விலத்தேல்லை. இருக்கிற குடிசையின்ரை கிடுகுகளும் உக்கி, உள்ளையிருந்து பார்க்க ஆகாயம் தெரியிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது. இனி மாரிகாலமும் நெருங்குது. அடைமழை பிடிச்சுதெண்டா இரவிரவாய் எழும்பியிருந்து வெள்ளத்திலை மிதக்கவேண்டியதுதான். கூலிவேலைக்கும் போகேலாது. கடவுளும் எங்களுக்கு முதுகுகாட்டிக் கொண்டுதானே இருக்குது.

பொங்கு தமிழுக்கு கடல் மாதிரியெல்லோ சனம் வந்தது.- ஏன்? ஆரேனும் சினிமா நடிகையள், பாட்டுக்காரர் வந்தவைகளோ? இல்லை. அல்லாட்டில், சுதுமலை கூட்டத்துக்கு வந்த மாதிரி இங்கையும் தலைவர் பிரபாகரன் வந்தவரோ? அதுகுமில்லை. அப்ப ஏன் இவ்வளவு சனம்? 'எங்கடை நிலம் எங்களுக்கு வேனுமெண்டதை' அறுத்துறுத்துச் சொல்லத்தான். எவ்வளவு சனம் அழுதழுது கத்தினதுகள். தங்கடை உணர்வை வெளிப்படுத்தினதுகள்! இதெல்லாம் வேடுவரோடு சேர்ந்து விசர்க்கதை பறைஞ்சு திரியிற சந்திரிகா அம்மாவுக்கு என்னத்தை விளங்கும். மனிதாபிமானம், பகுத்தறிவு இருக்கிற ஆக்களுக்குத்தானே எங்கடை பிரச்சினையும், உணர்வு வெளிப்பாடுகளும் விளங்கும்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் சிங்களப் பேப்பர்காரர் கலந்துகொண்ட கூட்டத்தில், பள்ளிக்கூடப் பெடிச்சியள் 'புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பிறகும் புதிய காவலரண்களை அமைக்கினம். அப்பிடியெண்டால் ஆமிக்காரருக்கு சமாதானத்திலை நம்பிக்கையில்லையோ?

சமாதானம் பற்றின முன்னெடுப்புகள் நடந்தாலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குக் கீழே கைதான தமிழ்க்கைதிகள் ஏன் இன்னும் விடுதலை செய்யப்படேல்லை?

ரத்வத்தையைப் பிணையில் விடுவிக்கலாமெண்டால், ஏன் தமிழ்க் கைதியளைப் பிணையில் விடுவிக்கேலாது?

இது சமாதானக் காலம் எண்டால் - நாங்கள் எப்ப எங்கடை சொந்த வீடுகளுக்குப் போறது? ஆமிக்காரர் எங்கடை வீடுகளை ஆக்கிரமிச்சிருக்கிறமாதிரி, புலியள் உங்கடை வீடுகளை ஆக்கிரமிச்சிருந்தால், உங்களுக்கு எப்பிடியிருக்கும்?

எண்டு நாக்கைப்பிடுங்கிற மாதிரிக் கேட்டகேள்வியளுக்கெல்லாம் - பேப்பர்காரர் மழுப்பல் பதிலுகளைத்தான் சொலலிப்போட்டுப் போனவை என்று பேப்பரிலை வாசிச்சனான். அவங்களுக்கு எங்கடை பிரச்சினையின்ரை அடியுந்தெரியாது, நுனியுந்தெரியாது. ஆனால், இந்தப் பிரச்சினையைவைச்சு-தாறுமாறாய், உருட்டிப்பிரட்டி, பந்தி பந்தியா எழுதிக் காசாக்கத் தெரியும். ஆராருக்கு எப்படியெழுதினாப் பிடிக்கும் எண்டதும் தெரியும். அவங்களுக்கு எங்களைப் பற்றியென்ன கவலை.

'இந்த அம்மா மனிசியும் கடைசிக்காலத்தில் ஊர்ச்சுடலையில்தான் இந்தக் கிழட்டுப் பிணம் வேகும்' என்று அடிக்கடி சொல்லிக் கனவு கண்டுகொண்டிருந்தது. கடைசியா இங்கையே செத்து, இங்கையே எரிச்சு... அவவின்ரை கனவும் பகல்க்கனவாகி ...."

போனகிழமை இஞ்சை செத்த இளம்பெட்டையின்ர வாழ்க்கையும் அநியாயம்! ஆரோ ஒருத்தன் சிரிச்சு மயக்கி எல்லாம் முடிஞ்சாப்போல, மாதக்கணக்கும் கூடிப்போச்சு அழிக்க வெளிக்கிட்டு, ஆளும் முடிஞ்சு... இப்பிடியே இங்கை இருக்கிற எங்கடை வாழ்க்கையும் சீரழிஞ்சுகொண்டு வாறதை நினைக்கப் பயமாக் கிடக்கு. எனக்கு மூண்டு பொம்பிளைப் பிள்ளையள் இருக்கு. மூத்தவள் இண்டைக்கோ, நாளைக்கோவென்று வந்து நிக்கிறாள். காவாலிக் கூட்டம் இருக்கிற இடம். பிள்ளையளுக்கு நல்லது - கெட்டது தெரியாத பருவம்? கடவுளே ஏறுமாறா ஏதும் நடந்தால்........"

"நாங்கள் ஒண்டும் கேக்கேல்ல. எங்கடை இடத்துக்கு எங்களைப் போகவிட்டால் காணும். எலிவளையெண்டாலும், எங்கடை தனிவளை கிடைச்சால்போதும். நாங்கள் நிம்மதியாக் கிடந்தெழும்புவம். ஒருவேளை சாப்பிட்டாலும் சந்தோசமா இருப்பம். ஆனால், ஆருக்கு விளங்குது எங்கடை கஷ்ரம். என்ர கவலை நானும் எங்கடை அம்மாவைப்போல ஊர்ச்சுடலையிலை வேகாமல் போகிடுவேனோ? எண்டதுதான். எங்கடை இடத்துக்கு நாங்கள் திரும்பிப்போவமோ? அல்லது இங்கேயே... ☆

## கிழக்கும் மேற்கும்

## புலவர் தருமி – கவிஞர் பிர்தௌசி



"நால்வகைப் பெண்டிரில் உத்தம இலக்கணம்
நிறைந்தவ ரெனப்படும் பதுமினி கூந்தலின்
வாசமும் செயற்கையோ?" - வாதிட்டனர் புலவர்!
"பதுமினி கூந்தலின் வாசமும் செயற்கையே"
"தெய்வப் பெண்களில் கூந்தலின் வாசனை...?"
"அவர்களின் கூந்தலும் மலர்மணம் பெறுவதால்
செயற்கையானதே" என்றார் கீரனார்!
தினம்நீர் வழிபடும் காளத்தி நாதரின்
துணையாய் விளங்கும் ஞானப்பு,ங்கோதையின்
கூந்தலின் மணமும் செயற்கையோ?" - புலவர்!
"அம்மையின் கூந்தலும் அப்படியானதே" - கீரனார்!!
இதுகேட்ட புலவர்தம் நெற்றிக் கண்ணினைச்
சிறிதே காட்டவும்" இந்திரன் போலவே
உம்முடலெல்லாமே கண்ணாக இருப்பினும்
உமது பாடல் குற்றம் குற்றம்தான்"
என்று உறுதியாய் உரைத்தார் கீரனார்!
நெற்றிக் கண்ணின் வெப்பம் தாங்காது
வருந்திய கீரர் பொற்றாமரைக் குளத்தில்
வீழ்ந்து வருந்திட மற்றையோர் வருந்தினர்!
சங்கப் புலவர்கள் நெஞ்சம் வ/திருந்தி
சோம சுந்தரரின் சந்நிதி அடைந்தனர்!
"கல்விச் செருக்கால் அறிவிழந்து நக்கீரர்
தங்களின் செய்யுளைப் பிழையென உரைத்தார்!
தங்களின் நெற்றிக் கண்ணின் வெப்பத்தால்
வாவியில் வீழ்ந்து வருந்தி உழல்கிறார்!
கீரனின் பிழையினைக் கருணை கூர்ந்து
தேவரீரே! பொறுத்திடல் வேண்டும்" எனத்
தோத்திரம் செய்யவே திருவுள மிரங்கிய
சோமசுந்தரர் நோக்கினால் கீரர்தம்
பொறிகள் புலன்கள் கரணங்கள் அனைத்தும்
அன்புரு வாகினார்! தம்பிழை உணர்ந்தார்!

முருகு

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தவம்மறந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த்து அற்று.

-திருக்குறள்.

## நமது நோக்கு

### ரணிலின் வலையும் சந்திரிகாவின் நிலையும்

சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு அரசியல்ரீதியில் தீர்வொன்றைக் காண்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்து சர்வதேச சமூகம் ஆழ்ந்த அக்கறையும், கவலையும் கொண்டுள்ளபோதிலும், ஆளும் அரசுக்கும், அதிகார ஜனாதிபதிக்குமிடையேயான முறுகல் நிலை தொடர்ந்து மேலும் இறுகிக்கொண்டே போவதற்கான சமிக்ஞைகளே தெரிகின்றது.

ஜனாதிபதியும் பிரதமரும் மூன்று தடவைகள் சந்தித்துப் பேசிய பின்னரும்கூட, ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிப் பேசியும், அறிக்கைகள் விட்டும் வரும் சம்பவங்கள் குறைந்தபாடில்லை.

இருதரப்பும், தத்தம் நியாயத்தை வலுப்படுத்தவும், எதிர்த்தரப்பினரின் தவறுகளை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி குற்றம் சுமத்தவும், மக்களுடனான தமது பொதுக் கூட்ட மற்றும் ஊடகங்களுடனான சந்திப்புக்களைத் தீவிரமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளமையானது, விரைவில் வரக்கூடியதான ஒரு தேர்தலுக்கான முன்னோடிப்பிரசார நடவடிக்கைகளாகவே கருதக்கூடியதாக உள்ளது.

நாடாளுமன்றத்தைத் தான் கலைக்கப்போவதில்லை என, வர்த்தக சமூகத்தவர்க்கு ஜனாதிபதி உறுதி கூறியுள்ளபோதிலும், ஒரு தேர்தலுக்கான செயற்பாடுகளை அவர் மேற்கொண்டு, அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருப்பதை அவரின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றது.

எனினும், தேர்தலின்போது தான் எதிர்கொள்ளக்கூடியதான சவால்களை முறியடிக்கத்தேவையான வியூகங்களைத் தயார் செய்வதிலேயே அவர் இப்போது தனது முழுக்கவனத்தையும் குவிமையப்படுத்தி வருகின்றார் என்பது தெளிவு.

ஜே.வி.பி.யுடனான கூட்டணி அமைப்பு முயற்சி தோல்வியுற்றதாக முன்னர் கூறியபோதும், அந்தக் கூட்டணி சாத்தியமானால் மட்டுமே, ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்கக்கூடிய நிலை ஓரளவுக்கேனும் ஏற்படும் என்பதில் சந்திரிகாவுக்கு - அதாவது, ஜனாதிபதிக்கு சந்தேகமே கிடையாது.

அதேவேளை - சமாதான முயற்சிகளில் ரணில் சர்வதேசத்தின் பின்பலத்துடன் எதையோ பரபரப்பாகச் செய்வதையும், அது ஓர் இறுக்கமான கட்டத்தை அடைந்துள்ளதையும், இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த திட்ட வரைபை விடுதலைப் புலிகள் கையளிக்கும் அளவுக்கு, தன்காலச் சமாதான நடவடிக்கைகளைவிட வெகுதூரம் ரணில் முன்னேறியுள்ளதையும் ஜனாதிபதியால் ஜீரணிக்க முடியாது போனதன் விளைவே, அவரின் அமைச்சுப்பறிப்பு அதிரடி நடவடிக்கையாகும். நிச்சயமாக ரணில் இந்த இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான விடுதலைப் புலிகளின் திட்டவரைபினை அப்படியே ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது சந்திரிகாவுக்குத் தெரியாத ஒன்றல்ல.

பாம்பின் காலை பாம்பே அறிந்து கொள்ளும் விடயம் அதுவாகும். ஆனாலும், இதையே தனது அரசியல்ரீதியிலான சட்ட பூர்வமான சதிக்கான காரணியாகவும் பயன்படுத்திக் கொண்டார். இதன்மூலம் சில முக்கிய இலக்குகளை அவர் எட்ட விரும்பினார். முதலாவது, பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் அரசின் செயற்பாடுகளுக்கு ஆப்பு வைத்தார்.

இரண்டாவது, ரணிலின் ஆட்சிக்கு ஓர் நெருக்கடியை ஏற்படுத்தி அதன் அதிகாரபலத்தையும், எல்லையையும் குறுக்கி அதனை ஒரு பொம்மை ஆட்சியாக்கினார்.

மூன்றாவதாக, இந்த இரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டதன் மூலம் தனது அரசியல் சகாக்களையும், பேரினவாத சக்திகளையும், தனது கூட்டணியில் தோழமைக் கட்சியாக இணையும் சாத்தியம் இன்னமும் உள்ளதான ஜே.வி.பியினரையும் தன்னைப் பாராட்டும்படி செய்யவைத்தார்.

நான்காவதாக, அரசியல் யாப்பின் பிரகாரம் சட்ட ரீதியாகத் தானே சிறிலங்காவின் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தையும் கையாளும் உரிமையும், கட்டுப்படுத்தும் திறனும் கொண்ட தனிப்பலமும், ஆளுமையும் கொண்ட தலைவி என்பதை நிரூபிக்கவும் செய்தார்.

ஆனாலும், சமாதானப் பேச்சுக்களை வலியுறுத்தும், வறிய இலங்கைக்கு போர் உட்பட ஏனைய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நிதிமூலத்தை வாரி வழங்கும் சர்வதேச, குறிப்பாக மேற்குலகச் சமூகத்தின் தற்போதைய தேவையையும், அபிலாஷைகளையும் ரணில் மேற்கொண்டு வந்ததைப்போன்று தொடர்ந்து நிறைவேற்றும் வலு அவரிடம் இல்லை.

சமாதானத்தை நிராகரிக்கும் சக்திகளின் பக்கபலமின்றி எதிர்கால அரசியலில் ஸ்திரமாகக் காலூன்றி தனித்துவக் கொள்கைகளுடன் நிலைத்து நிற்கக்கூடிய பலம் அவருக்குக் கிடையாது. சமாதானத்தை ஏற்கவும் அவருக்குத் துணிச்சல் மட்டுமல்ல, விருப்பமுமில்லை. அதனை நிராகரிக்க அவருக்கு ஆற்றல் மட்டுமல்ல சர்வதேச ஆதரவுமில்லை. இதுவே, இன்றைய அரசியல் யாதார்த்தமாகும். இந்த இரண்டும் கெட்டான் நிலையில், இருதலைக் கொள்ளி எறும்பாகச் சந்திரிகா தவிப்பது, அவரின் அண்மைக்கால செயற்பாடுகள் அனைத்திலும் தெளிவாகத் தெரிவதுடன், அவரது பேச்சுகளிலும் மிகத் தெளிவாக எதிரொலிக்கவும் செய்கிறது.

இந்தநிலையில், பிரதான கட்சிகள் இரண்டையும் இணைக்கும் பணியில், நாட்டின் நலன்கருதி தான் ஈடுபட்டிருப்பதாகவும், அவர் அறிக்கை விடுத்திருப்பது தான் இந்த நூற்றாண்டின் சிறந்த பகிடியாக உள்ளது. அந்த அளவுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ரணில் ஒரு வலையை சந்திரிகாவுக்கென விரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் - அதாவது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிறிலங்கா அரசியலில் நேர்விரோதக் கொள்கையுடைய இருபெரும் கட்சிகள். இவை இரண்டும் சுட்டமண்ணும், பச்சை மண்ணும் போன்றவை. ஒன்றுடன் ஒன்று ஒட்டாது, ஒட்டினாலும் நிலைத்திருக்காது. இது அவர்கள் இருவருக்கும் தெரியும்.

ஒருவேளை - பேரினவாத கொள்கைகளின் அடிப்படையில் தவிர்க்கமுடியாத ஒட்டுறவு ஒன்று ஏற்படுவதாக வைத்துக் கொண்டாலும், அது சமாதானத்தை மேலும் சாத்தியமற்றதாக்கும் ஒன்றாகவே அமையும் என்பதும் நிச்சயமாகும்.

## நாடும் நடப்பும்



செய்தி: சமாதானப் பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிட்டுப் போரை ஆரம்பிக்க மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# ஒன்பது சமஷ்டி அதிகார அலகுகளுடன் ஐக்கிய இலங்கைக்குள் ஆட்சியமைப்பு!

ஐக்கிய இலங்கைக்குள் 9 சமஷ்டி அதிகார அலகுகளை உருவாக்கவேண்டுமென, முஸ்லிம் புத்திஜீவிகள் சமூகம் - அரசையும், விடுதலைப் புலிகளையும் கோரவுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையில், புத்தளம் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்னும் தலைப்பிலான கருத்துக்கள நிகழ்வொன்று, நேற்றுமுன்தினம் மாலை புத்தளம் இப்னு பதூதா மண்டபத்தில் நடைபெற்றது.

தற்போதைய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்வதாகக் கருத்துத் தெரிவித்த முஸ்லிம் புத்திஜீவிகள் - இந்த தீர்வின்மூலம், சகல சமூகங்களும் சமமான உரிமைகளை அனுபவிப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

அதற்காக, சகல சமூகங்களினதும் நிதானப் போக்குடையவர்களால் தயாரிக்கப்படுகின்ற தீர்வை - அரசியல் சாசனத்தில் உள்வாங்குமாறு, அரசை வலியுறுத்தவுள்ளதாக இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரும்பான்மை சமூகங்களைக்கொண்ட பிரதேசங்களில் அல்லது மாகாணங்களில், அந்த சமூகத்தின் கீழான ஆட்சி முறையை ஏற்படுத்துவன்மூலம், ஏனைய சமூகங்களின் விகிதாசாரத்துக்கமைய அவர்களது வளங்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சமஷ்டி முறையின்படி தமிழ், முஸ்லிம் சமூகம் 2 சமஷ்டி ஆட்சியையும், வடக்கு - கிழக்கு தவிர்ந்த தென்னிலங்கையில் 7 மாகாணங்களிலும் பெரும்பான்மை சமஷ்டி ஆட்சியில், அதில் வாழும் சிறுபான்மை சமூக விகிதாசாரப் பகிர்வில் நன்மையடையுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோல், மாகாண சமஷ்டி ஆட்சியில் இரண்டு சபைகள் அமைக்கப்படுவதுடன், அதில் ஒரு சபையாக சகல இனங்களையும்கொண்ட பிரதிநிதிகள் - விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்படவேண்டுமெனவும் சமர்ப்பிக்கப்படவுள்ள புத்திஜீவிகளின் நகல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

## வல்வை றோ.க.த.க. பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, பல வருடங்களின் பின்னர், கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை முதல் சொந்தஇடத்தில் இயங்கிவருகின்றது.

வடமராட்சியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் பின்னர், மக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து, இந்தப் பாடசாலை வல்வெட்டி அ.மி.த.க. பாடசாலையுடன் இணைந்து இயங்கி வந்தது.

பாடசாலையை மீளவும் உரிய இடத்தில் ஆரம்பிக்கும் நிகழ்வு - அதிபர் ஆ.முத்தையா தலைமையில் நடைபெற்றபோது, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். (122)

# மாவீரர்களின் பெற்றோர்கள் தீவுப் பகுதிகளில் கௌரவிப்பு

மண்மீட்புப் போரில் தமது இன்னுயிரை அர்ப்பணித்த மாவீரர்களை நினைவுகூர்ந்து கடைப்பிடிக்கப்படும் மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் தீவகக் கோட்டத்தின் பல கிராமங்களில் நடைபெற்றுவருகின்றன.

நேற்றுமுன்தினம் சுருவில் ஊரக தேசிய ஏழுச்சிப் பேரவை, சுருவில் சனசமூக நிலையம் என்பன இணைந்து அப்பகுதியில் உள்ள மாவீரர் குடும்பங்களை கௌரவித்துள்ளன. இந்நிகழ்வு சுருவில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தலைமையில் நடைபெற்றது. பொதுச் சுடரினை தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். நினைவுரைகளை தேசிய எழுச்சிப் பேரவை தீவக கோட்ட இணைப்பாளர் செல்வம், தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ராணி மைந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதேபோன்று, தம்பாட்டி ஊரகத்திலும மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. தம்பாட்டி பொது மண்டபத்தில் கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் பொதுச் சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், ராணி மைந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதேவேளை- நாரந்தனை பகுதி மாவீரர் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாரந்தனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

## வாகனங்களின் இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு!

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து, அண்மையில் ஆயிரத்துக்கும் அதிகமான வாகன இலக்கத்தகடுகள் கிடைக்கப்பெற்றதுடன், ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகடுகளும் - உரிமையாளர்களால் பெறறுக்கொள்ளப்படாது தேங்கிக்கிடப்பதாகவும், பலருக்கு கடிதம் அனுப்பியும் இதுவரை இலக்கத்தகடுகளை உரிமையாளர்கள் வந்து பெற்றுக்கொள்ளவில்லையெனவும் யாழ்.மாவட்ட உதவிப் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாளைமறுதினம் புதன்கிழமை (விடுமுறை தினம்) மு.ப. 9.30 மணிதொடக்கம் பி.ப. 12.30 மணிவரை, இலக்கத்தகடுகளை வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடிதம் அனுப்பியும் மாதக்கணக்காக உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாத இலக்கத்தகடுகள் - திருப்பி கொழும்பிற்கு அனுப்பிவைக்க ஆலோசிக்கப்படுகிறது.

எனவே, உரிமையாளர்கள் வாகனப்பதிவுச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை - வாகனப் பதிவுச் சான்றிதழ் கிடைக்கப்பெறாதவர்கள் நடப்பு வருட வாகன வரி மற்றும் வலுவிலுள்ள காப்புறுதிச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் தவறாது எதிர்வரும் 26 ஆம் திகதி அலுவலகத்திற்குச் சமுகமளித்து, இலக்கத்தகடுகளைப் பெற்றுச்செல்லுமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

## மட்டு.வெடிபொருள் அகற்றும்பணி 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெடிபொருள் அகற்றும் பணி எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருப்பதாக, மட்டக்களப்பு மாவட்ட வெடிபொருள் அகற்றும் பிரிவின் தலைமையகம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பில் 37 இடங்களில் வெடிபொருட்கள் அகற்ற வேண்டியுள்ளன. இவற்றில் பாலையடிவெட்டைப் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முதல் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பகுதிகளில் மத்திய மருந்தகம் ஒன்று அமைக்கப்படவிருப்பதாலேயே முதலில் இப்பகுதியில் வெடி பொருட்கள் அகற்றப்படவுள்ளன.

இந்தப் பணிக்கென 45 பேர் கொண்ட விசேட குழுவொன்று பயிற்றப்பட்ட நிலையில் ஆயத்தமாக இருப்பதாகவும் - விரைவான மிதிவெடி அகற்றும் சேவைமூலம் மட்டக்களப்பில் மீள்குடியேற்றப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடியுமெனவும் மட்டக்களப்பு மாவட்ட வெடிபொருள் அகற்றும் பிரிவின் தலைமையலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

சர்வதேச அரசியல்...



# பிளயர் - புஷ் அரசியல் தந்திரமும் இஸ்லாமிய தீவிரவாதத்தின் பதிலடியும்

இலங்கையின் சமாதான முயற்சி ஸ்தம்பித்துப் போயிருக்கும் நிலையில் நோர்வே தூதுக் குழுவினர் இந்தியாவுக்கு சென்றுள்ளனர். அவர்கள் இந்தியர்களுக்கு இலங்கையின் நிலைமை பற்றியும் தங்களது நிலைப்பாடு பற்றியும் எடுத்துக் கூறியுள்ளனர். நோர்வே தரப்புக்கு இந்தியா - இலங்கையின் அயல்நாடு என்பதும், தற்போது நடைபெறும் அனைத்தும் இந்தியர்களுக்கு தெரியாதது என்ற நோக்கிலும், அத்தகைய விளக்கத்தை அளிக்க முன்வரவில்லை. மாறாக, தற்போது உருவாகியுள்ள குழப்பத்திற்குரிய அல்லது குழப்பிய சக்திகளுக்கு உரிய விளக்கத்தை அளிப்பதே, அவர்களது புதுடில்லி வருகைக்கான காரணமாகும். அவர்களது இராஜதந்திர நகர்வை புதுடில்லி புரிந்துகொண்டாலும், அதற்குரித்தான நடவடிக்கையை எடுத்ததாக தகவல் இல்லை. இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் குழப்பம் நீடிப்பது - இந்தியர்களின் பலத்தை காட்டுவதுடன், அமெரிக்காவின் பலவீனத்தையும் ஒருங்குசேர வெளிப்படுத்துகின்றது. இந்த வாரம் உலகளாவிய ரீதியில் அமெரிக்கா அடைந்துவரும் நெருக்கடிகளையும், புஷ் - பிளயர் தந்திரத்தையும் மதிப்பீடு செய்ய முயல்வோம்.

அமெரிக்க ஜனாதிபதி தனது மூதாதையரின் நாடான பிரித்தானியாவிற்கு நான்கு நாள் அரசமுறைப் பயணத்தை மேற்கொண்டு வருகை



தந்திருந்தார். பெருமளவான எதிர்ப்புக்கும் மத்தியில், பெரியளவான பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே புஷ்ஷின் வருகை சாத்தியமானது. புஷ்ஷை மிகமோசமாக எதிர்க்கும் பிரித்தானிய மக்கள், புஷ்ஷை ஒரு போர் வெறியனாகவே சித்திரிக்கின்றனர். ஈராக் மீதான போரை இன்னுமே நிராகரிக்கும் பிரித்தானிய மக்கள் - மிக மோசமான முறையில் பிரித்தானியா எங்கும் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு புஷ்ஷை விமர்சித்தனர். உலகத்தில் அதிக தடவை கொடும்பாவி கட்டி எரிக்கப்பட்ட தலைவர்கள் வரிசையில், முதலாவது நபராக புஷ்ஷே விளங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், புஷ்ஷின் பிரித்தானிய அரச முறைப் பயணத்தின் பிரதான நோக்கம் - இழந்துபோன தனது செல்வாக்கை மீளக்கட்டியெழுப்புவதுடன், ஐரோப்பாவுக்குள் எழுந்துள்ள எதிர்ப்பினை, இராஜதந்திரத்தினால் முறியடிப்பதாகவும் அமைந்திருந்தது.

குறிப்பாக, ஈராக் விடயத்தில் அமெரிக்கா எதிர்கொள்ளத் தொடங்கியுள்ள ஆபத்தான விளைவினால், ஐரோப்பாவின் உதவி அவசியமானதாகவுள்ளது. அதிலும் பிரித்தானியாவில் எழுந்துள்ள விமர்சனத்தினால், பிரித்தானியப் படைகள் ஈராக்கிலிருந்து வாபஸாகும் நிலை ஏற்பட்டுவிடுமோ, என்ற சந்தேகமும் புஷ்ஷை பாதிக்கும் இன்னோர் விடயமாகும். இத்தாலிய படைகள் மீது ஈராக்கில் ஏற்பட்ட அதிரடித்



தாக்குதலால், இத்தாலி நிலைகுலைந்துள்ளதுடன், இத்தாலிய இராணுவத் தலைமைக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. படைகளை விலக்கிக் கொள்ளுமாறு ஊடகங்கள் கருத்துக் கூற ஆரம்பித்துள்ளன. இவற்றை தடுக்கவே புஷ் அண்மைக்காலத்தில் சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். அவற்றில் ஒன்றாகவே அவரது பிரித்தானிய விஜயமும் அமைந்துள்ளது. அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தலை எதிர்கொள்ளுகின்ற நிலையில், குடியரசுக் கட்சியின் பிரதான வேட்பாளர் புஷ் தனது சுயகௌரவத்தை தக்கவைக்கவேண்டிய சூழலை, தேடவேண்டியவராகவுள்ளார். ஈராக் மீதான போரை நியாயப்படுத்தமுடியாத காங்கிரஸூம், சென்றும் சி.ஐ.ஏ. ஐ தீவிர விசாரணைக்கு உட்படுத்தியிருப்பதும், போருக்கு எதிரான உணர்வலைகள் அமெரிக்காவில் அதிகரித்து வருவதும், புஷ்ஷின் அரசியலைப் பாதிக்கும் விடயங்களாக உள்ளன. இதனாலேயே, வெளிப்படையாக கூறாத போதும் அமெரிக்கா சார்புடைய ஊடகங்களும், ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை விலக்கிக் கொள்ளலாம் என்று கூறிவருகின்றன. அவ்வாறு திட்டவட்டமாக விலக்கிக் கொள்ளும் மனநிலை இல்லாது, தற்காலிக பின்வாங்கல்களை அமெரிக்கா வெளிப்படுத்தும் தகவல்களை அமெரிக்க ஊடகங்கள் ஏற்படுத்திவருகின்றன. இவற்றால் ஒரு தேர்தல் வெற்றியை அடைந்து கொள்ளலாம் என்று கூட ஆளும் தரப்பு கணக்குப் போடலாம்.

இதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் இன்னோர் சுவாரசியமான சம்பவத்தையும் நோக்கலாம். அதிபர் புஷ் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்த பின்னர் நிகழ்த்திய உரையில் ஈராக் மீதான போரை நியாயப்படுத்தியிருந்தார். சதாமை தாம் தோற்கடிக்காது விட்டிருந்தால், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமே ஆபத்தான நிலையை அடைந்திருக்கும் என்று புஷ் குறிப்பிட்டதுடன், ஒரு சுதந்திரமான நாடு, தனது சுதந்திரத்தை பாதுகாக்க, போர் புரியலாம் என்றார். அப்படியாயின், உலகத்தில் புஷ்ஷின் பார்வையில் பிரித்தானியாவும், அமெரிக்காவும் மட்டுமே சுதந்திரமான நாடுகளாக உள்ளன. ஈராக் போன்ற அமெரிக்காவை எதிர்க்கும் நாடுகள் எவற்றையும் அவர் சுதந்திரமான நாடுகளாக கருதவில்லையா, அல்லது ஈராக்கின் பதில் நடவடிக்கையால் அதிர்ச்சியடைந்து புஷ் அப்படி பதிலளிக்கிறாரா என்பது புதிய சர்ச்சையாகவுள்ளது.

இன்னோர் விடயத்தையும் புஷ் பிரித்தானியாவில் நின்றுகொண்டு வெளிப்படுத்தியிருந்தார். அது தனது பாரம்பரிய நட்பு நாடாகவும், தோழமை நாடாகவும் விளங்கும் இஸ்ரேலினை கண்டித்த நிகழ்வாகும். இஸ்ரேலினை கண்டித்ததுடன், பலஸ்தீனப் பக்கம் சார்ந்து புஷ் பேசுவது போன்றும், அவ்வுரை அமைந்திருந்தது. இதனை புஷ் அமெரிக்காவில் இருந்து பேசமுடியாததாலோ என்னவோ பிரித்தானியாவிலிருந்து பேசியுள்ளதாக தோன்று



கிறது. ஏனெனில், அமெரிக்க யூதர்களாலேயே குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் தேர்தல் ஒவ்வொன்றிலும் தாக்குப்பிடிக்கின்றன. அதனுடன் நின்றுவிடவில்லை. யூதர்களின் சேவை மூலம் அமெரிக்காவின் முழுப் பலத்தையும் தக்க வைப்பவர்களாகக்கூட, யூதர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில், இஸ்ரேலினை புஷ் கண்டித்திருப்பது உலகளாவிய தனது கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று காட்டுவதற்கான அணுகுமுறையாகக்கூட அமையலாம்.

அவ்வாறே வடகொரிய விவகாரத்தையும் அமெரிக்கா ஆளும் தரப்பு, சற்று மென்மையான போக்கினூடாக கையாள முனைகிறது போல் தெரிகிறது. குறிப்பாக, அமெரிக்கா தனது படைகளை வடகொரிய எல்லையிலிருந்து குறைக்கப்போவதாக கூறியிருப்பதுடன், வடகொரிய அணுவாயுதப் பரிசோதனையை கைவிடுவதற்கு மாற்றாக பல சலுகைகளை செய்ய முன்வரப்போவதாகவும், ஏற்கனவே வடகொரியா கோரியிருந்த விடயங்கள் பலவற்றில் இணக்கங்கண்டிருப்பதாகவும் கூறுகின்றது.

எனவே, முழு உலகத்திலும் அமெரிக்காவின் தீவிரவாதத்தன்மை சற்று தணிந்துள்ளது போல் அமெரிக்க நிர்வாகத்தால் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது. இது தற்காலிகமான பின்வாங்கலாக மட்டும்தான் அமையப்போகிறதா அல்லது நீடித்து நிலைபெறுமா என்பது புதிய சந்தேகமாகவுள்ளது. அவ்வாறு அது நீடிக்க வேண்டுமாயின், அமெரிக்க கொள்கைகள் மீது நெருக்கடிகள் அதிகரிப்பது அவசியமாகும். பிளயரும் - புஷ்ஷும் புதிய தந்திரோபாயத்தை வகுக்க முயலுகின்றபோது, இஸ்லாமிய தீவிரவாதிகள் தமது கைவரிசையை தீவிரப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

அமெரிக்காவின் பெயரால் ஈராக்கில் நிகழ்த்தப்பட்டுவரும் தற்கொலைத் தாக்குதல்கள், மிக வெற்றிகரமாக நகர்ந்துகொண்டு செல்கிறது. ஒவ்வொரு நாளும் ஜனாதிபதி புஷ்ஷுக்கு அதிர்ச்சி காத்திருக்கிறது. தற்கொலைத் தாக்குதல் அல்லது மறைந்திருந்து மேற்கொள்ளும் தாக்குதல் அல்லது றொக்கட் தாக்குதல் என, தாக்குதலின் வகை எவ்வாறென்றில்லாமல் நிகழ்ந்துவருகிறது. இதன் தாக்கம் உலகம் முழுவதும் அமெரிக்காவுக்கு எதிரான சக்திகளை உசார்ப்படுத்தியுள்ளது. தற்கொலைத் தாக்குதலின் வடிவமே இஸ்லாமிய தீவிரவாதிகளிடம் அமெரிக்கா, இஸ்ரேலிய தாக்குதலையடுத்தே அதிகரித்துவருகிறது. இஸ்ரேல் தனது சுதந்திரத்தைப் பாதுகாக்க முயலும் அதேவேளை பலஸ்தீனியரின் சுதந்திரத்தை தடுக்கும் நோக்கிலான இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து நிகழ்வதுபோல், அமெரிக்கக் கூட்டுப்படைகளின் நடவடிக்கைகள், ஈராக் மீதான ஆக்கிரமிப்பையடுத்தே அதிகரித்துள்ளது.

அண்மையில், துருக்கியில் நிகழ்ந்துள்ள தற்கொலைத் தாக்குதல் மிகமோசமான அழிவுகளையும், சிதைவுகளையும் ஏற்படுத்தியிருந்தது. 31 பேர் கொல்லப்பட்டதும், 420 பேருக்கு மேல் காயப்பட்ட சம்பவம், பிரித்தானிய தூதரகத்தை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது துருக்கி, அமெரிக்க - பிரித்தானிய நாடுகளின் கூட்டாளியாக விளங்குவதுடன், ஈராக்குக்கு படைகளை அனுப்பவும் ஒரு சந்தர்ப்பத்தில் தயாராக இருந்தது. இது மட்டுமல்லாமல், ஈராக்கிய போர் காலத்தில் அதிக ஆதரவை வழங்கிய இஸ்லாமிய நாடுகளில் ஒன்றாக துருக்கி விளங்கியது. இதனால், இத்தாக்குதல் முக்கியம் வாய்ந்ததாக விளங்குகின்றது எனலாம். சவுதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக துருக்கியில் நிகழ்ந்த இத்தாக்குதல், நன்கு திட்டமிடப்பட்டு வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்ட தாக்குதல்போன்றே தெரிகின்றது.

இப்பந்தி எழுதிக்கொண்டிருக்கும்போதே, ஈராக்கில் அமெரிக்க சார்பு காவற்துறை மீது தற்கொலைத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இரு காவல்துறை நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

15இற்கு மேற்பட்ட பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதலை நிகழ்த்தும் சதாம் ஆதரவுப் படையினரிடமும் துல்லியமான அரசியல் நோக்கம் காணப்படுகிறது. ஆரம்பத்தில் அமெரிக்க - பிரித்தானிய படைகளை தாக்கியவர்கள், திடீரென ஐ.நா பணிமனையையும், பின்னர் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரையும், பின்னர் - உதிரியாக வந்து சேர்ந்த இத்தாலியப் படைகளையும் தாக்கினர். தற்போது, தமது விதேசிகள் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளனர். ஏனெனில், அமெரிக்காவும் - பிரிட்டனும் மிகப்பிந்திய காலத்தில் உலகத்திற்கு வெளிப்படுத்தும், ஒரு செய்தியாக ஈராக்கிய மக்களிடம் ஜனநாயக முறைப்படி ஆட்சியை ஒப்படைக்கப்போவதாகக் கூறிவருகின்றனர். இதனால், உள்ளூர்



விதேசிகள் என சதாம் ஆதரவாளர் கருதுவது போன்ற பிரிவினரை இப்போதே கையாள ஆரம்பித்தால், எதிர்காலத்தில் ஏமாற்றுத்தனமான ஆட்சியைப் பொறுப்பேற்கும் கும்பலையும் கண்டுபிடிக்கமுடியாதநிலை, அமெரிக்க தரப்புக்கு ஏற்படுமென கருதுகின்றனர். அத்துடன், நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோகக் கும்பலாக விளங்குவதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பத்துக்கும், அவர்களே காரணமென சதாம் படைகள் கருதுகின்றனர். இதனால் உள்ளூர் அரசியல் தலைமைகளிடம் ஈராக்கின் ஆட்சியை உருவாக்கமுடியாத நிலையை ஏற்படுத்துவதே, அவர்களது தற்போதைய பிரதான இலக்காகும்.

எனவே, புஷ் - பிளயர் இருவரும், ஈராக் விடயத்தில் போட்ட புதிய தந்திரமான ஈராக்கியரிடம் ஆட்சியைக் கையளிப்பதென்பதும்கூட மீள நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஐ.நாவையும், ஐரோப்பிய யூனியனையும் ஒருவாறு சம்மதிக்கவைத்து, ஈராக் விடயத்தில் முழு உலகத்தையும் இழுக்க புஷ் - பிளயர் போட்ட திட்டமிடலும் பிசுபிசுத்துவிட்டது. ஈராக்கியரிடம் ஆட்சியை ஒப்படைத்தால், பிரான்ஸ் அமெரிக்க - பிரிட்டிஷ் நடவடிக்கையில் ஒத்துழைப்பதாகக்கூட அறிவித்திருந்தது. ஏற்கனவே ரஷ்யாவும் ஈராக்கில் சுதந்திரமான அரசொன்றை அமைப்பது பற்றி ஆர்வம் கொண்ட அரசாக காட்டிக்கொண்டது. இதனால், அமெரிக்க - பிரிட்டிஷ் ஆளும் தரப்பும் அத்தகைய அணுகுமுறையூடாக பொம்மை அரசொன்றை நிறுவி, அதனூடாக தமது நெருக்கடியைத் தவிர்த்துக்கொள்ளலாமென எண்ணியிருந்தன. அத்தகைய பொம்மை அரசைப் பயன்படுத்தி, முழுமையான தமது நலன்களை அடைந்து கொள்ளலாமென, அமெரிக்க - பிரிட்டிஷ் ஆளும் தரப்பு திட்டமிட்டிருந்தன. ஆனால், சதாம் படைகள் தமது தற்கொலைத் தாக்குதலின் அணுகுமுறையால் இரு அரசுகளின் திட்டங்களையும் படிப்படியாக நிலைகுலைய செய்துவருகின்றன. இது முழுமையான மாற்றத்தை ஈராக்குக்கு உடனடியாக ஏற்படுத்தாது தவிர்த்தாலும், அமெரிக்க - பிரிட்டிஷ் ஆளும் தரப்புக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவே அமையவுள்ளது.

எனவே, அமெரிக்க - பிரிட்டிஷ் உடமைகளை மற்றும் இராணுவத்தினரை இலக்குவைத்து தொடரும் தாக்குதல்கள் உலக அரசியலில் கணிசமான மாறுதலை ஏற்படத்தக்கூடியது. பின்லேடன் போட்ட கழுத்துச்சுருக்கை சதாம் ஹூசைன் படிப்படியாக இறுக்குவாரா என்பதே தற்போது விட்டுச்செல்லக்கூடிய கேள்வியாகும்.

கே.ரீ.கணேசலிங்கம்

# அமெரிக்கப் போர் விமானங்கள் ஈராக் மத்திய பகுதியில் தாக்குதல்

## மூன்று பொதுமக்கள் பலி

ஈராக்கின் மத்திய பகுதியில் அமெரிக்கப் போர் விமானங்கள் நேற்று மேற்கொண்ட றொக்கற் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் கிர்குக் பகுதியிலுள்ள எண்ணைக் கம்பனி ஒன்று சேதத்துக்குள்ளாகியது.

ஈராக்கின் வடபகுதி மற்றும் மத்திய பகுதிகள் மீது கடந்த இரண்டு வாரங்களாக அமெரிக்கப் போர் விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்கள் போராளிக் குழுக்களுக்கு எதிராகவே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், செவ்வாய்க்கிழமை ரம்ழான் பண்டிகை முடிவடைந்ததும்தாக்குதல்கள் இன்னும் அதிகரிக்கப்படும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## இஸ்ரேலியப் படையினர் இருவர் பலஸ்தீனமருகே சுட்டுக் கொலை

இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்துக்கும் இடையே அமைக்கப்பட்டு வரும் தடுப்புச் சுவருக்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த இரண்டு இஸ்ரேல் இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கிழக்கு ஜெருசலத்தில் அமைந்துள்ள 'அபுடிஸ்' பிரதேசத்தினூடாக அமைக்கப்பட்டுவரும் தடுப்புச் சுவரின் கட்டட வேலைகளுக்கான உபகரணங்களுக்குப் பாதுகாப்பாக நின்ற இஸ்ரேல் படையினரையே சுட்டுக் கொன்று விட்டு, ஆயுததாரிகள் தப்பிச்சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக தடுப்புச்சுவர் கட்டும் பகுதியில் கடமையிலுள்ள படையினர் மீது பலஸ்தீன மாணவர்கள் கல்வீசித் தாக்கிவந்ததாக -

இஸ்ரேலியத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

## அமெரிக்கப் படையினர் இருவர் ஈராக்கில் வெட்டிப் படுகொலை!

(பக்தாத்)

ஈராக்கின் மொசூல் நகரப்பகுதியிலுள்ள வீதி ஒன்றில் போக்குவரத்து வீதி ஒழுங்கு சமிக்ஞைக்காக காத்துநின்ற இரு அமெரிக்கப் படையினர் நேற்று இனந்தெரியாதோரால் கழுத்து வெட்டப்பட்டு கொல்லப்பட்டனர்.

நேற்றுக் கொல்லப்பட்டவர்களுடன் சேர்த்து இதுவரை அமெரிக்காவில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 184 ஆக உயர்ந்துள்ளது.

## ஆப்கானில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் – 4 பேர் காயம்!



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்திற்குள் செல்வதற்கு முயற்சித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் நான்கு ஆப்கான் பொதுமக்கள் காயமடைந்தனர்.

2001 ஆம் ஆண்டு தலிபான் ஆட்சியை அகற்றுவதற்கு மஜகிடீன் என்ற இராணுவ அமைப்பு பேருதவியாக இருந்தது. ஆனால், அந்த அமைப்பை பின்னர் இராணுவத்திலிருந்து நிறுத்தப்பட்டனர். இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களே தமக்கு தரவேண்டிய சம்பளத்தைத் தருமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகள் தகவல் தருகையில்- ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் யன்னல் கண்ணாடிகளை உடைத்ததுடன், துப்பாக்கியால் சுட்டனர். இதன்பின்னரே வேறுவழியின்றி படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவித்தனர்.

## பிரிட்டனில் வலது குறைந்தோருக்கான கையடக்கத் தொலைபேசி அறிமுகம்!



கண்தெரியாதவர்களுக்கும், கண்பார்வை குறைந்தவர்களுக்குமென புதிய கையடக்கத் தொலைபேசி பிரிட்டனில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கையடக்கத் தொலைபேசியை ஜப்பானிய நிறுவனமான ஒகூசில் வடிவமைத்துள்ளது.

இந்தத் தொலைபேசியில் எந்தத் தகவலையும் பார்வையிடமுடியாது. ஆனால் எமக்குத் தேவையான செய்திகள் அனைத்தையும் ஒலிவடிவில் கேட்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசியை வயது முதிந்தவர்கள் அதிகம் விரும்புவதாகவும், பார்வையற்றவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என்று - இதனை உருவாக்கிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

# உலக நோக்கு

### மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய

## கத்தோலிக்க சபையினர் கொலம்பியாவுக்கு விஜயம்!



கொலம்பியாவில் நடைபெறும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு - ரோமன் கத்தோலிக்க சபையும், மனித உரிமை அமைப்பின் அதிகாரிகளும் கொலம்பியாவுக்குச் சென்றுள்ளனர்.

இடதுசாரித் தீவிரவாதிகளினால் ஏழு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கொலம்பியாவில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கிராம மக்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அரச சார்பான 'பரா' படையினர் தடை விதித்து வருவதாலேயே - உல்லாசப் பிரயாணிகளை விடுவிப்பதற்கு இடதுசாரித் தீவிரவாதிகள் மறுத்து வருகின்றனர்.

இந்தக் கிராம மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டால் மாத்திரமே உல்லாசப் பிரயாணிகளை தாம் விடுவிப்போம் எனத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொலம்பியா சென்றுள்ள மனிதஉரிமை அதிகாரிகள், ஐ.நா பிரதிநிதிகள், ரோமன் கத்தோலிக்க திருச்சபை அங்கத்தவர்கள் மற்றும் உள்ளூர் மனித உரிமை அதிகாரிகள் - தீவிரவாதிகளின் பிரதேசமான செயரா நெவாடா மலைத்தொடர்ப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் அங்கு நடைபெறும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக கேட்டறிந்துகொள்வதுடன், அந்தப் பிரதேச மக்களின் வறுமைக்கான காரணத்தையும் கண்டறியவுள்ளனர்.

இதன்பின்னர் உல்லாசப் பிரயாணிகளின் விடுதலை தொடர்பாக போராளிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




அமெரிக்க ஜனாதிபதி புஷ், பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியோர், பிரிட்டிஷ் இளவரசி மற்றும் புஷ் ஆகியோர் கைகோர்த்துச் செல்வது போன்று வேடம் அணிந்து காணப்படுகின்றனர்.

## ஊர்சுற்றி எழுதுவது

ஒருவர் இறந்துவிட்டால் அவர் வறியவராக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும் அவருக்கு இறுதி மரியாதை செய்வதில் சிங்களவர்கள் மதிப்புப்பெற்றவர்கள். இறந்தவரின் சடலத்தை நீண்ட நாட்களுக்கு வேண்டுமானாலும் பாதுகாப்புடன் வைத்திருந்து, தொலைதூரத்திலுள்ள உறவினர்கள், நண்பர்களுக்கு அறிவித்து அவர்களும் வந்தபின், இறந்தவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தி கௌரவமாக, ஊர்கோலமாகக் கொணடு சென்று, அடக்கம் செய்வார்கள். வாழ்நாளில் ஒருவர் பகையாளியாக வாழ்ந்திருந்தாலும் அவர் இறந்த செய்தி அறிந்தால் பகையை மறந்து அங்கு விரைந்து சென்று உதவுவதும், இறுதி அஞ்சலி செலுத்துவதும் சிங்களவர் மத்தியிலுள்ள நல்ல பண்புகளில் ஒன்று!

வடக்கிலும் - கிழக்கிலும் தமது மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் இன்னுயிரை ஈய்ந்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் நாளாக நவம்பர் மாதம் 27 ஆந் திகதி தமிழர் தாயக பூமியில் அனுஷ்டிப்பது கடந்த பல ஆண்டுகளாகப் பின்பற்றப்படும் ஒரு புனிதமான சடங்கு.

உலகப் போரில் உயிர்நீத்த படையினருக்காக - நவம்பர் 11 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இரண்டு நிமிடம் அமைதி காத்து மௌனம் அனுஷ்டிப்பது உலக நாடுகள் அனைத்திலும் பின்பற்றப்படும் ஒரு புனிதமான சடங்காகும்.

நவம்பர் மாதம் முழுவதுமே உத்தரிக்கிற ஆத்மாக்களின் ஆத்மா சாந்திக்காக கிறிஸ்தவர்கள் செவிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதத்தில் மயானங்களுக்கு உறவினர் சென்று கல்லறைகளைச் சுத்தப்படுத்தி, புதுமெருகூட்டி மெழுகுவர்த்தி, ஊதுபத்தி கொளுத்தி இறந்தவர்களை நினைத்து அவர்களின் ஆத்ம சாந்திக்காக செபம் செய்வார்கள்.

இலங்கையில் தமிழர் தாயகமான வடக்கிலும் - கிழக்கிலும் நமக்காக உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவதற்காக அவர்களின் சகோதரர்கள் ஆயத்தம் செய்து வருகின்றனர்.

இந்த நிகழ்வுகளில் இராணுவம் தலையிடாதென்று கொழும்பில் இராணுவப் பேச்சாளர் உறுதியளித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் மற்றும் பிரதிநிதிகளும், படைத்தரப்பினரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட மாநாட்டிலும், படையினர் இம் மாவீரர்தின நிகழ்வுகளுக்கு இடையூறாக இருக்கப் போவதில்லையென உறுதியளித்தனர்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் நடக்கும் சம்பவங்கள் எதிர்மாறாக இருக்கின்றன. படையினரும், காவல்துறையினரும் மாவீரர்நாளையொட்டி மக்கள் அமைக்கும் அலங்கார வளைவுகளை உடைத்தெறிகிறார்கள், மஞ்சள்-சிவப்புக் கொடிகளைக் கிழித்தெறிகிறார்கள், வாகனங்களில் கொடிகள் கட்டுவதைத் தடுக்கிறார்கள், மாணவர் பேரவை அலுவலகத்துள் நள்ளிரவுக்குப்பின் அத்துமீறிப் புகுந்து சோதனையிடுகிறார்கள்.

மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஆத்திரமூட்டி வலிந்து மோதலைத் தூண்டுவதற்கும் படையினரும், காவல்துறையினரும் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகிறார்கள்.

மக்களும், மாணவர்களும் மட்டுமல்ல மக்களின் காவலர்களான விடுதலைப் புலிகளும் மிகப்பொறுமையாக அமைதியாக, கட்டுப்பாடாக இருக்கிறார்கள்.

இராணுவத்தினரும், பொலிஸாரும் யாழ்ப்பாணத்தில் இப்படி நடந்துகொள்வது மேல் மட்டத்துக்குத் தெரியாது?

பாதுகாப்பு அமைச்சையும், உள்நாட்டு அமைச்சையும் சந்திரிகா அம்மையார் எடுத்துக்கொண்டதன் பயனா? அல்லது கிழக்கே சென்ற முப்படைத் தளபதிகள் அங்கே நீங்கள் அமைதியைக் கடைப்பிடித்தால் போதும் என்று அறிவுறுத்தி வந்தார்களா?

ஐரோப்பிய ஆணைய வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பான கிறிஸ்பற்றன் நாளை இலங்கை வருகிறார். நாளை மறுதினம் 26 ஆம் திகதி வன்னி சென்று தலைவர் பிரபாகரனைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தலைவர் பிரபாகரனை அவர் சந்திக்கக்கூடாது என்று 'திவயின'சகோதர ஆங்கில நாளிதழான 'த ஐலண்ட்' தனது முதல் பக்கத்தில் ஆசிரியத் தலையங்கமாக கடும் விஷத்தைக் கக்கியிருக்கிறது. அது மட்டுமல்ல அவரை கிளிநொச்சிக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்றும் கேட்டிருக்கிறது.

கொழும்பில் நடந்த சிங்கள - தமிழ்க் கலைக்கூடலுக்கும் இப்படித் தூண்டிவிட்டு சிஹல உறுமயவுக்கு மூக்குடைத்துவிட்டது, திவயினவும் தான்!

இந்தப் பத்திரிகைகளைத் தான் இங்குள்ள படையினர் படிக்கின்றனர். சும்மா 'கிடைக்கின்றனவோ சும்மா கிடைத்தாலும் விஷத்தைத் தொடலாமா? எயிட்ஸை விட இது மோசம்!

யாழ்ப்பாணம்;

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

'இந்த நாட்டில் உள்ள ஒரேஒரு புத்திசாலி யார் தெரியுமா? என்று திடீரென்று கேட்டார் கனகர்.'

'என்னைத்தவிர வேறுயாரும் இருப்பதாகத் தெரியவில்லை என்றார் மயிலர்...'

'உம்மடை வீட்டிலை நீர் புத்திசாலியாக இருக்கலாம். நான் கேட்பது இந்த நாட்டிலை... என்றார் கனகர்.'

'ஏன்... நீர்தான் என்று சொல்லப்போகிறீரோ..? என்றார் மயிலர்.'

சரி...சரி... விஷயத்துக்குவா... இந்த நாட்டிலை உள்ள ஒரேஒரு புத்திசாலி யார்? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லன் பார்ப்பம்."

'எனக்குப் புத்திசாலிகளோடை பெரிசாத் தொடர்பில்லை. நீயே சொல்லு கேட்பம்'

'ஜனாதிபதி சந்திரிகாதான்'

'உனக்கெப்பிடித் தெரியும்...?'

'அவதான் சொல்லியிருக்கிறா...' தன்ரை அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முன்னர் அனைவருக்கும் புத்திவரவேண்டும் என்று கொழும்பிலை ஆசிரியர்கள் முன்னிலையிலை வைச்சு சொல்லியிருக்கிறா.

'அப்ப அங்கையிருந்த ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் புத்தியில்லை என்றெல்லோ அர்த்தம்...?'

'என்னமோ... தான் எல்லோருக்கும் புத்திவரவேண்டும் என்று பிரார்த்திக்கிறதாவுமெல்லே பேசியிருக்கிறா...!'

'அது சரி.. இப்பதான் எனக்கொருவிஷயம் நல்லா விளங்குது. அதாவது புத்தியில்லாத்தனத்தாலைதான் சனங்கள் அம்மாவை ஜனாதிபதியா தெரிவு செய்திருக்கினம்.. அப்படித்தானே...!'

'இஞ்சோ பேய்த்தனமாய் கதைக்காதை மயிலு. பிறகு உனக்கும் அம்மா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏதாவது செய்துபோடுவா... கவனம்...'

நான் பேய்த்தனமாக் கதைக்க எனக்கென்ன புத்தியில்லையே...

எனக்கு நல்ல புத்தியிருக்கு... நான் ஜனாதிபதித் தேர்தலிலை ஒருத்தருக்கும் வோட் போடேல்லை தெரியுமே...! என்று பலமாகச் சிரித்தார் மயிலர்.

-தெருவாசி

# தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்க பௌத்த பிக்குகள் நடவடிக்கை!

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதம் தொடக்கம் நாடுதழுவிய ரீதியில் தொலைக்காட்சிச் சேவை ஒன்று புத்த பிக்குகளால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவையில் பல உள்நாட்டு, வெளிநாட்டு புத்த பிக்குகள் ஈடுபடவுள்ளனர். அத்துடன், இந்த தொலைக்காட்சி சேவை நிகழ்ச்சி நிரலில் பௌத்தம் தொடர்பான உண்மையை உரைக்கும் படங்களும், பௌத்த தத்துவங்களும் ஒளிபரப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நவீன இலத்திரனியல் யுகத்தில், கலாசாரம் என்பது புரிந்துகொள்ளமுடியாத சீரழிவிற்குள் சென்றுகொண்டிருக்கிறது. இவ்வாறான நடவடிக்கையே எம்மை இந்தப் புதிய ஒளிபரப்பு சேவையினை தொடங்கவைத்ததென, றங்கிரி தம்புள்ள விகாரையைச் சேர்ந்த பிரதம தேரரான இனாமலுவ சமங்கலுவ நாயக்க தேரர் தெரிவித்தார்.

ஒளிபரப்பைத் தொடங்குவதற்குத தேவையான சகல ஏற்பாடுகள் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுவிட்டது. தற்போது அரசின் அனுமதிக்காகவே காத்திருக்கின்றோம்.

ஒளிபரப்பு நிலையம், தம்புள்ளவிலும் இதற்கான இணைப்பு நிலையம் கொழும்பிலும் இயங்கவுள்ளது. நாம் பல நிகழ்ச்சிகளை ஆரம்பத்திலேயே ஒளிபரப்பவுள்ளோம் எனவும் தேரர் தெரிவித்தார்.

இந்த ஒளிபரப்பில், தொடர் நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், பொருளாதாரம், பண்பாடு, கல்வி தொடர்பான கலந்துரையாடல்கள், சமூக விவகாரங்கள் என்பன ஒளிபரப்பப்படும் என்றும், அரசியல் ரீதியான எந்தவொரு நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படமாட்டாதெனவும் தேரர் தெரிவித்தார்.

அத்துடன், நிகழ்ச்சிகள் யாவும் சிங்களத்தில் ஒளிபரப்பப்பட்டாலும், ஆங்கிலம், தமிழ் ஆகிய உபதலைப்புக்களுடன் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகுமெனவும் அவர் தெரிவித்தார்.

## நாட்டை நெருக்கடிக்குள்...

இங்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடலை நடத்தவுள்ளார். இதில் ஜனாதிபதி சந்திரிகாவை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை புதன்கிழமையும் சந்திப்பார்.

அத்துடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹவ்ரக் ஹொக்லண்ட் ஆகியோரையும் சந்திப்பார்.

இவர்களின் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு புதன்கிழமை காலை கிளிநொச்சிக்குச் செல்லும் பற்றன் அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன், பொருளாதார விவகார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரை காலை 9.15 மணிக்குச் சந்திப்பார். இந்தச் சந்திப்பு இரண்டு மணித்தியாலங்கள் நீடிக்கும்.

இதன் பின்னர் வன்னியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் திட்டங்களைப் பார்வையிடுவதுடன், அதற்கான நிதியும் அவரால் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## படையினரின் கெடுபிடிகளின்றி...

கட்டுப்பாட்டுப் பகுதியிலும் எந்த வித இடையூறும் இன்றி தமிழ் மக்கள், மாவீரர்தின நிகழ்வுகளைக் கொண்டாடிவருகின்றனர்.

வீதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருப்பதுடன, முக்கிய சந்திகளில் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

முக்கிய சந்திகளிலும் பொது இடங்களிலும், மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டு மாவீரர்தின சிறப்பு மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் புகழ்பாடும் எழுச்சி கானங்களும் இசைக்கப்பட்டு வருவதுடன், நாளைமறுதினம் மாவீரர்தின இறுதிநாள் நிகழ்வுகளைச் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு மக்கள் தயாராகிவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்களும் அப்பகுதி மக்களும், இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்துவருகின்ற போதிலும், இராணுவத்தினரோ பொலிஸாரோ எந்த வித கெடுபிடிகளிலும் ஈடுபடவில்லை எனவும் தெரியவருகிறது.

## மூதூர்...

இந்த நிகழ்வில், கலந்துகொண்ட பெருந்திரளான மக்கள் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

# போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்த வளைவே படையினரால் அகற்றப்பட்டதாம்!

## பரமேஸ்வரா சந்தி சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்த அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டதனாலேயே அவற்றை படையினர் அகற்றினர் என, இராணுத்தின் ஊடகப் பேச்சாளர் சுனேத பெரேரா தெரிவித்தார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் குறித்து பி.பி.ஸியின் தமிழோசையில் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த 20 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், படை அதிகாரிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்குமான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன் போது மாவீரர்தின நிகழ்வுகளுக்கு படையினர். எந்தவித இடையூறும் செய்யமாட்டார்கள் என உறுதியளிக்கப்பட்டது.

எனினும் விடுதலைப் புலிகள் அரச கட்டடங்களில் புலிக்கொடி ஏற்றுவதையோ, வீதிகளுக்கு குறுக்காகவோ அல்லது வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாகவோ அலங்கார வளைவுகளை அமைக் கக் கூடாதெனவும் படையினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனைப் புலிகளும் ஏற்றுக்கொண்டனர்.

எனினும், திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. இனாலேயே சம்பவ தினத்தன்று இரவு 10.30 மணிளவில் அவ்விடத்திற்குச் சென்ற படையினர் அந்த அலங்கார வளைவை அப்புறப்படுத்தினர்.

விடுதலைப் புலிகள் உறுதியளித்தபடி வீதியின் போக்குவரத்துக்கு இடையூறாக இந்த அலங்கார வளைவை அமைத்திருக்காவிடின் எந்தப் பிரச்சினையும் வந்திருக்காது

அங்கு கூடிநின்ற மாணவர்களே படையினரைச் சீண்டும் வகையில் செயற்பட்டனர். ஆனால், படையினர் தமது வேலை முடிந்ததும் அங்கிருந்து சென்று விட்டனர்.

அலங்கார வளைவின் மீது ஏறி நின்றதால் அது முறிந்து வீழ்ந்ததில் சிலர் காயமடைந்தனர். இனினும் இச்சம்பவத்துக்கும் படையினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பரமேஸ்வரா...

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தினுள் சென்ற, இராணுவத்தினரும், பொலிஸாரும் அங்கிருந்த உடைமைகளைச் சேதபடுத்தியுள்ளனர்.

இதேவேளை - இராணுவ வீரர் ஒருவர் அங்கிருந்த இருக்கைகளை துப்பாக்கியால் அடிக்க முயன்ற வேளை அத்துப்பாக்கி தவறுதலாக வெடித்துள்ளது.

இதனையடுத்து, அங்கு நின்ற மூன்று இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாகப் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ப)

## இலங்கையின்...

கிறிஸ் பற்றன் ஒரு தீவிர விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்றும், இதனாலேயே விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்ததினமான 26 ஆம் திகதி அவரைச் சந்திக்க வன்னிக்குச் செல்கின்றார் என, தேச அபிமானிகள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (01)

## உயர்மட்ட...

சமாதான செயலக அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சினை பொறுப்பெடுத்த பின்னர் எந்தவொரு ஹெலிகொப்ரரும் விடுதலைப் புலிகளை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபடவில்லை எனவும், விடுதலைப் புலிகளும் எம்மிடம் தமது பயணத்திற்குக் ஹெலி தேவையென இதுவரை கேட்கவில்லையெனவும் பெயர் குறிப்பிடவிரும்பாத படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் நாட்டை விட்டுச் சென்றாலும், ஓமந்தைக்கும் கொழும்புக்கும் வடக்கு-கிழக்கில் இராணுவப் பகுதிகளில் பயணம் செய்தாலும் தாம் வழமையான பறப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## மாவீரர் தின...

ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 9 மணியளவில் திருகோணமலை உட்துறை வீதியிலிருந்து ஆரம்பமான பேரணி இரு பிரிவுகளாகப் பிரிந்து சென்றது.

இருநூறு ஆட்டோக்களை உள்ளடக்கிய ஒரு பேரணி நிலாவெளி வரையும் அணிவகுத்துச் செல்ல, மற்றைய பேரணி, மிகுதி 150 ஓட்டோக்களும் கண்டி வீதி ஊடாக தம்பலகாமம் வரை சென்றுள்ளது.

இந்த ஆட்டோக்கள் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அழகாக மாவீரர்தின எழுச்சியைத் சித்தரிக்கும் வகையில் அணிவகுத்துச் சென்றுள்ளன. (04,10)

TYPEWRITING AND SHORTHAND CLASSES FOR NEW BATCHES

These classes are commencing on Saturday, 6th December 2003 at 9.00A.M at our Typing Centre, at 68, Clock Tower Road, Jaffna.

Those who are interested to follow these classes are requested to effect their registrations from 1st December 2003.

Please note that after completion of their course they will also receive training in the Computer on 'Word Processing'.

Director

INSTITUTE OF INFORMATICS STUDIES
68, Clock Tower Road, Jaffna

## அரசியல்...

காணியமைச்சர் ராஜித சேனாரத்ன-

இந்த வாரத்திற்குள் நான்கு பேரணிகளை தாம் முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இவர்களின் இந்த நடவடிக்கை முதலாவதாக பதுளை மற்றும் மொனராகல ஆகிய மாவட்டங்களில் ஆரம்பித்து பின்னர் ஏனைய மாவட்டங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும், அமைச்சர் சேனாரத்ன தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதியுடன் நாம் எந்தவொரு புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கையொப்பம் இடவில்லை. இது எமக்குரிய வேலையுமல்ல.

நாம் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதென்றால், அவர் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இல்லையெனில் நாம் அதிலிருந்து விலகுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டணியின்....

விருப்பங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானங்கள் வலுவற்றவை என்பதனை மத்திய குழுக் கூட்டத்தில் நிரூபிக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை - கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி கூட இருக்கிறது. இதில் பங்கேற்கு மாறு வடக்கு - கிழக்க மாவட்டங்களின் 36 அங்கத்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டக் கிளைகள் ஒன்றுகூடி கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து வி.ஆனந்தசங்கரி விலக வேண்டுமென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மத்திய செயற்குழுவில் ஆனந்தசங்கரியை பதவி விலகக்கோரும் 25 பேர் அங்கம் வகிக்கின்றார்கள். எனவே குறிப்பிட்ட தினத்தில் கூட்டணிக் கிளைகளின் தீர்மானங்கள் தொடர்பில் முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (01)

## முரசொலிமாறன் நேற்று சென்னையில் மரணம்

இந்திய மத்திய அரசின் மூத்த அமைச்சர் முரசொலிமாறன் நேற்று சென்னை அப்பலோ மருத்துவமனையில் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 64.

கடந்த இரு வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர், அமெரிக்காவில் சிகிச்சைபெற்று செப்ரெம்பர் மாதம் நாடு திரும்பினார்.

இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய அமைச்சர் பதவியினை வகித்தவராவார்.

## சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு இன்று இரவு கூடுகிறது!

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று ஜனாதிபதி மாளிகையில் கூடவுள்ளது.

இந்த மத்திய குழுக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்படும். இந்தக் கூட்டணி அமைப்பது தொடர்பாக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை இன்று சமர்ப்பிக்கும்.

## கொழும்பில் நேற்று மினி சூறாவளி

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளியில் நேற்று வீசிய மினி சூறாவளியால் ஐநூறுக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 3.10 தொடக்கம் 3.13 வரையான மூன்று நிமிடங்கள் மாத்திரமே இடம்பெற்ற இந்தச் சூறாவளியினால் பெரும் சொத்து அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஐநூறுக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்ததுடன், பல பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் கொழும்பிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள மக்கள் அச்சமடைந்து காணப்பட்டனர்.

## ஐரோப்பிய வெளிவிவகார...

புலிகளின் தலைவரைச்சந்திக்கவுள்ள கிறிஸ் பற்றன், நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்ற பிரகாரம் தற்போது கொழும்பில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்னிலங்கை இனவாத சக்திகள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் இந்த எதிர்ப்புக்களின் பின்னணியில் அயல்நாட்டு சக்திகள் சிலவும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடுகளில் ஒன்றான பிரிட்டன் - விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்திருக்கின்றபோது, ஐரோப்பியயூனியனின் வெளிவிவகார ஆணையாளர் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பது குறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பது - அவர்கள் தொடர்பான நிலைப்பாடுகளை தெளிவாக்கிக்கொள்ள வழிவகுக்கும் என்றும் - இதனால், புலிகள் தொடர்பாக தமது நீண்டகாலப் பிரச்சினைகள் தோற்றுப் போய்விடும் என்ற அச்சத்தில்தான் கிறிஸ் பற்றனின் கிளிநொச்சி விஜயத்திற்கு இனவாத சக்திகளிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் ரீதியாகத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தியமை -

சமாதான முயற்சிகளையும் பொருளாதார அபிவிருத்திகளையும் பாதிக்கும் என்று, ஐரோப்பிய யூனியன் கண்டனம் தெரிவித்திருந்ததன் பின்னணியிலேயே - கிறிஸ் பற்றன் கொழும்பு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.